# சுதந்திர தமிழ் ஈழம் அமைத்திட உலகே உதவுக !!




323.1 CEL

# சுதந்திரத் தமிழ் ஈழம் அமைத்திட உலகே உதவுக!!



மூலம்: தந்தை சா.ஜே.வே.செல்வநாயகம்
கியூ. சி., பா.உ
தமிழ்வடிவம்: திருக்கோணமலை வரதராசன்

ARCHIVES
UNIVERSITY OF JAFFNA ★ LIBRARY
323.1 CEL AR
Dr. C. S. NACHINARKINIAN
LECTURER
DEPARTMENT OF COMMUNITY MEDICINE
UNIVERSITY OF JAFFNA
2007
N.A

## என்னுரை

ஈழத்தமிழ்த் தேசிய இனம் தன் வரலாற்றின் திருப்புமுனையில் இன்று நிற்கின்றது; எனவே ஆண்ட தமிழ்த் தேசிய இனத்தை மீண்டும் ஆள வைக்கும் பணியில் ஈடுபடுவது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

தமிழர் சிங்கள சிறீலங்காவிடமிருந்து பிரிந்து சுதந்திர இனமாக வாழவேண்டுமென்ற விடுதலை வேட்கைக்குத் தடையாக சிங்கள அரசுகள் தொடர்ந்து செய்து வரும் சொல்லொண்ணுக் கொடுமைகளை, மிக இரத்தினச்சுருக்கமாக தந்தை செல்வர் அவர்கள் 1974-இல் நடைபெற்ற 20-வது பொதுநல நாடுகளுக்கு ஓர் அறிக்கை ஆங்கிலத்தில் சமர்ப்பித்தார். அதனை, "ஈழத்தமிழரின் நீண்ட பயணம் உலகநாடுகள் கைகொடுக்க வேண்டும்" என்று தலைப்பிட்டு இந்நூலில் இணைத்துள்ளேன்.

இரண்டாவது அறிக்கை 1975-ஆம் ஆண்டு இளவேனிலில் நடைபெற்ற அனைத்துலக பாராளுமன்ற ஒன்றிய மகாநாட்டில் ஒப்படைக்கப்பட்டது. அந்த அறிக்கையை. "பிரிவினைதான் ஒரேவழி" என மகுடமிட்டு இணைத்துள்ளேன்.

மூன்றாவதாக 1976-ஆம் ஆண்டு 5-வது அணிசேரா மகாநாட்டிற்கு வருகை தந்தோருக்குக் கையளித்த அறிக்கையை, "அநீதிக்கு உலகம் ஆதரவா?" என்ற தலைப்புடன் ஈண்டு இணைத்துள்ளேன்.

இம்மூன்று அறிக்கைகளையும் யான் ஒருங்கு சேர்த்துத் தமிழ் வடிவம் கொடுத்து "சுதந்திரத் தமிழ் ஈழம் அமைத்திட உலகே உதவுக" என்று நூல் வடிவாக்கியமை மூலம், தமிழ் மக்கள் எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினைகளில், தந்தை செல்வா வின் இவ்வறிக்கைகள் உலகரங்கில் ஏற்படுத்திய தாக்கத்தைத் தமிழினம் காலத்தால் அழியவிடாது பேணிப்பாதுகாத்து வைக்க வேண்டும் என்ற சிந் தனையுடன் எனது பங்களிப்பாக இந்நூலை வெளி யிடுகின்றேன்.


தமிழ் ஈழ நாட்டினம் தனக்குரிய நிலப்பகுதி கள் எவை என்பதை அறிந்து கொள்ளவேண்டும். இக்குறையை நூலின் இறுதியில் இணைத்துள்ள "தமிழ் ஈழ" எல்லைப்படம் நிறைவு செய்வதுடன் தமிழ் மரபு வழித் தாயகத்தின் பூகோள அமைப் பை மாற்றும் சிங்கள அரசின் வஞ்சகத் திட்டங் களையும் புலப்படுத்துகின்றது. பாரம்பரிய - நிலப் பகுதியை நாம் பறிகொடுத்துவிடின் தமிழ் ஈழக் கோரிக்கையின் தளமே நிர்மூலமாகிவிடும் என்ப தனை இங்கு வலியுறுத்தியுள்ளேன்.

இந்நூலை அக்கறையுடன் அச்சிட்டுதவிய, சைவப் பிரகாச அச்சகத்தாருக்கும், அட்டைப் படத்தை அச்சுப்பதிவு செய்த புனிதவளன் கத்தோ லிக்க அச்சகத்தாருக்கும் என் நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன் இப்படைப்பு உங்கள் கரங்களில் தவழுவதற்கு ஊக்கமும் ஆக்கமும் தந்துதவிய சிந்தனைச்சிற்பி சி. கதிரவேற்பிள்ளை பா. உ. அவர் களுக்கும், அணிந்துரை அளித்துக் கௌரவித்த

மதிப்பிற்குரிய தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமும் எதிர்க்கட்சித் தலைவருமான அ. அமிர்தலிங்கம் பா. உ., தலைவர் மு. சிவசிதம்பரம் பா. உ. ஆகியோருக்கும், தமிழ் ஏந்தல் ஈழவேந்தன் அவர்களுக்கும், இந்நூலினைப் பல தொல்லைகளின் மத்தியில் அச்சேற்றப் பொருளுதவி நல்கிய நற்பெரியோர்களுக்கும் என் உளம் கனிந்த நன்றியறிதலை மரபுவழி நின்று மாண்புடன் நவில்கின்றேன்.

நன்றி; வணக்கம்.

அன்புடன்



194A, பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு - 12, 22-8-77.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும்
தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபரும்
தமிழ் ஈழ முதல்வருமான
**திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. காங்கேசன்துறை**
B. A. (Cey.) Advocate அவர்களின்

## மதிப்புரை

ජාතික රාජ්‍ය සභාව
தேசிய அரசுப் பேரவை
NATIONAL STATE ASSEMBLY



இலங்கை ஆங்கிலேயர்களிடமிருந்து சுதந்திரமடைந்த நாள் தொட்டு இந்நாட்டின் தமிழ்த்தேசிய இனத்தின் அடிமைத்தனத்தை முழுமைப்படுத்தும் பொருட்டு சிங்கள ஆட்சியாளர் எடுத்துவந்த நடவடிக்கைகள் எத்தனையோ. 1970-ஆம் ஆண்டு தொட்டு அந்நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன.

1972ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்காவாலும் 1978ஆம் ஆண்டு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவாலும் உருவாக்கப்பட்ட புதிய குடியரசு

அரசியலமைப்புக்கள் தமிழ் மக்களை மேலும் அவல நிலைக்குள்ளாக்கின. இந்த அவலச்சுமையிலும் உலக அரங்கில் பிரச்சாரம் மூலம் ஆதரவு திரட்டும் உத்தியை நாம் கையாண்டதால், ஐ. நா. சபையில் எமது குரல் ஒலிக்கவும், மசகு செட் அவையூடே எமக்கு ஆதரவுத் தீர்மானம் நிறைவேற்றவும் வழி பிறந்தது.

இத்தொடர்பில் (1) 1974-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுநல அமைப்பு நாடுகளின் 20-ஆம் மகாநாடு, (2) 1975-இல் நடைபெற்ற அனைத்துலக பாராளுமன்ற ஒன்றியத்தின் வசந்தகாலக் கூட்டம்; (3) 1976-ஆம் ஆண்டில் நடந்த அணிசேரா நாடுகளின் ஐந்தாவது மாநாடு ஆகிய மூன்று மாநாடுகளும் கொழும்பில் நடைபெற்றபோது எமது விடுதலை இயக்கத்தைச் சீரியமுறையில் வெளிநாட்டவர்க்கு அறிமுகப்படுத்தினோம். அப்போது நாம் அம்மாநாட்டுப் பிரதிநிதிகளிடம் சமர்ப்பித்த மூன்று மகஜர்களும் இனவாத ஆட்சி எமக்கு இழைத்த அநீதிகளையும் எமது விடுதலைக் கிளர்ச்சிகளுக்கான காரணிகளையும் தெளியத் தருவன,

அம்மூன்று மகஜர்களையும் தனித் தனியே மொழிபெயர்த்து "இலங்கைத் தமிழரின் நீண்ட பயணம் உலகநாடுகள் கைகொடுக்க வேண்டும்", "பிரிவினைதான் ஒரே வழி", "அநீதிக்கு உலகம் ஆதரவா....?" என்ற தலைப்புகளில் தொகுத்து "சுதந்திரத் தமிழீழம் அமைத்திட உலகே உதவுக." என தனியொரு நூல்வடிவில் வெளிக்கொணர்கிறார் திருமலை நண்பர் திரு. வரதராஜன்

அவர்கள். எமது இயக்க வட்டாரத்திற்கு இவர் அந்நியர் அல்லர், அறிமுகமானவர். ஏற்கனவே. "சகவாழ்வா......? சதா மோதலா......?" என்ற வெளியீட்டுக்குப் பொறுப்பாக இருந்தவர். மேலும் பல வெளியீடுகளைத் தருவதற்கு விழைபவர்.

தமிழ் ஈழத்தினர் பலர் தமது மரபுவழித் தாயகத்தின் எல்லைக்கோடுகள் எவை, சிங்கள இனத்தவரின் ஊடுருவல் எங்கு எங்கு என்பதை அறியாதிருக்கின்றனர். இந்த அறியாமை எமது இலட்சியப் பயணத்தில் ஓர் அடிப்படைப் பலவீனமாகும். இக்குறையை நூலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள "தமிழ் ஈழ எல்லைப்படம்" தமிழ் ஈழ நிலப்புலத்தை வரையறுத்துக் காட்டுவதுமாகும். நண்பர் திருமலை வரதரதராசன் அவர்கள் இந்நூலைபல தொல்லைகளின் மத்தியில் அரும் பாடுபட்டு முறையாகத் தொகுத்து பாரிய செலவையும் பொருட்படுத்தாது, வெளியீடுதல்கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன். ஒரு இயக்கம் செய்தற்குரிய இப் பணியினைத் தனியொருவராக இருந்து அவர் முடித்ததை தமிழ் உலகம் நன்றியுடன் போற்றுகிறது.

நண்பர் வரதராசனின் இப்பணி ஒரு பாரிய பணியாகும். இப்பணி வெற்றிபெற ஈழத்தமிழர்கள் இந்நூலுக்கு ஆதரவு தர வேண்டுகிறேன்.

வெல்க அவர்தம் பணி!

அன்பன்

தெல்லிப்பழை,
26-8-78.

**தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்**
உயர்திரு. மு. சிவசிதம்பரம் பா. உ. நல்லூர்.
B A. (Lon.) Advocate
**அவர்களின் விதப்புரை**

UNIVERSITY OF JAFFNA ★ LIBRARY ★

ජාතික රාජ්‍ය සභාව
தேசிய அரசுப் பேரவை
NATIONAL STATE ASSEMBLY



தமிழில் அரசியல் இலக்கியங்களைப் படைப்பது எமது கோட்பாடுகளையும் செயற்பாடுகளையும் தமிழ் மக்களுக்குத் தெரிய வைப்பதற்கும் —புரிய வைப்பதற்குமாகும். அத்தகைய அரசியல் வெளியீடுகளை ஆங்கிலத்தில் தருவது அந்நிய உலகு எம் கருத்துக்களையும் பணிகளையும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற வேட்கையினாலாகும். அங்ஙனம் நமது இயக்கச் சேதிகளைத் தாங்கி வெளிவந்த மூன்று ஆங்கில வெளியீடுகளைத் தமிழில் தருகிறார் திருமலை தந்த இளம் நண்பர் ச. பெ. வரதராஜன் அவர்கள். இவரின் நோக்கம், நாம் வெளியுலக அரங்குகளிலும் அரசியல் அவதானிகள் மத்தியிலும் ஆற்றும் பிரச்சாரப் பணியை நமது மக்களும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதாகும்.

கொழும்பில் நடைபெற்ற மூன்று முக்கிய சர்வதேச மாநாடுகளின் போது தனித்தனி மூன்று ஆங்கில வெளியீடுகளை வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் பார்வைக்கு வைத்தோம். அம்மாநாடுகளில் பங்குபற்றிய பல்வேறு நாடுகளினதும் பிரதிநிதிகள் அவ்வெளியீடுகளை ஆர்வத்துடன் கிரகித்துக்கொண்டனர். அந்த ஆர்வத்தின் எதிரொலிகளை இன்று பல்வேறு நாடுகளிலும் கேட்கக் கூடியதாய் இருக்கிறது. எம் சார்பில் எமது சர்வதேச அனுதாபிகள் பல்வேறு நாடுகளிலும் இன்று குரல் கொடுப்பதற்கு இவ்வெளியீடுகள் ஆதாரமாய் அமைந்துள்ளன.

இவற்றைக் கருத்துச் சிதைவின்றி மொழி பெயர்த்து நூல்வடிவில் உங்கள் முன்வைக்கும் வரதராசன் இந்நூலை வெளியீடுவதற்கெனக் சண்துஞ்சாது கடுமையாக உழைத்துள்ளார். அவர் உழைப்புக்கு இந்நூலின் சிறப்பு ஓர் உரைகல்லாகும். இந்நூலை அனைவரும் வாங்கிப் படித்துப் பயன்பெறுவதுடன் நூலாசிரியரையும் ஊக்குவிக்க வேண்டுகிறேன்.

இந்நூலாசிரியருக்கு என் வாழ்த்துக்கள்

இங்ஙனம்,

பர். உ. நல்லூர்

100, நொறிஸ்கனல் வீதி,
கொழும்பு-10, 20-7-77.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

தமிழனை மறவாத் தமிழேந்தல்
**ஈழவேந்தன்** மரபுவழி நின்று மாண்புடன்
மொழிபவை ——



ஈழம்வாழ் தமிழினம் தான் இழந்த தமிழ்ஈழத்தை மீண்டும் மீளமைப்புச்செய்ய எடுக்கும் இயல்பான முயற்சியை சிங்களஅரசு தம்படையின் துணைகொண்டு நசுக்க முயலுகின்றது.

ஒரு நாடு அல்லது ஓர் இனம் தியாகத்தினால் மட்டும் விடுதலை பெறமுடியாது; உலகின் கவனத்தை ஈர்க்கும் முறையில் அதனுடைய விடுதலைப் போராட்டத்தின் தோற்றமும் வரலாறும் பரப்பப்பட வேண்டும். இப்பணியில் தமிழர் விடுதலைக் கூட்டணி இன்று ஈடுபட்டிருப்பது மகிழ்ச்சிக் குரியது.

தமிழரின் விடுதலை வேட்கைக்குத் தடையாக சிங்கள அரசுகள் செய்துவரும் சொல்லொண்ணுக் கொடுமைகளை, 1974 ல் நடைபெற்ற 20ஆவது பொதுநல நாடுகளின் மகாநாட்டிலும், 1975 இல் நடைபெற்ற அனைத்துலக பாராளுமன்ற ஒன்றிய மகாநாட்டிலும், 1976–இல் நடைபெற்ற அணிசேரா மகாநாட்டிலும் தந்தை செல்வாவின் பெயரில் வழங்கப்பட்ட அறிக்கைகள் "சுதந்திரத் தமிழ் ஈழம் அமைத்திட உலகே உதவுக" எனும் தலைப்பில் நூல்

வடிவம் பெற்று இன்று வெளியிடப்படுகின்றது. ஆங்கிலத்தில் வெளிவந்த இப்பிரசுரத்தின் உள்ளடக்கம் ஈழம் வாழ் தமிழ்த் தேசியஇனத்தை எதிர்நோக்கும் அடிப்படைச் சிக்கல்களை ஏற்றமுற விளக்கி உலக நாடுகளிடையே உரியதாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேற்குறித்த அறிக்கையின் தமிழ் ஆக்கத்தினை எம் இயக்கத்தில் மிகவும் ஈடுபட்டு உழைக்கும் தம்பி திரு ச. பெ. வரதராஜன் அவர்கள் நல்ல ஆற்றொழுக்கு நடையில் தந்துள்ளார். ஆங்கில மூலத்தின் பொருளை உணர்ந்து தமிழில் தந்துள்ள இந்நூல், தமிழர் பிரச்சனையையொட்டி உலகின் கவனத்தைக்கவர தமிழர் விடுதலைக் கூட்டணி ஆற்றி வரும் பணியை நல்ல முறையில் எடுத்துக் காட்டுகிறது. என் அருமைத்தம்பி வரதராஜன் அவர்களின் தமிழ் ஆர்வமும் மொழிபெயர்க்கும் ஆற்றலும் போற்றுதற்குரியது மட்டுமல்ல, இன்றைய தேவையை ஈடேற்றி வைக்கும் ஒரு நல்ல முயற்சியுமாகும். இத்தகைய நல்ல முயற்சியில் மேலும் வெற்றி காணவேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

அன்பன்,

ப. புலேந்திரன்

தலைவர்
த. வி. கூ. கொழும்புக் கிளை

"தமிழகம்"
150, சுபத்திரராம வீதி,
நுகேகொடை, 18-6-77.




1-9-1974ம் ஆண்டு ஈழத்தில் நடைபெற்ற 20வது பொதுநல அமைப்பு நாடுகளின் மாநாட்டுக்கு வருகை தந்த பேராளர்களுக்கு ஈழத்தமிழர் சார்பில் மூதறிஞர் தந்தை செல்வாவினால் ஒப்படைக்கப்பட்ட அறிக்கை.

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் இணைப்பொருளாளரும்**
**சிந்தனைச் சிற்பியுமான**
உயர்திரு. சி கதிரவேற்பிள்ளை, பா. உ. கோப்பாய்
B, A. Hons. Phil. (Cey.) Advocate
அவர்களின் அணிந்துரை

ජාතික රාජ්‍ය සභාව
**தேசிய அரசுப் பேரவை**
**Na\ional State Aasembly**



**ஈழத்தமிழருடைய பிரச்சினைகள் பெரிதாகி அது உலகப் பிரச்சினையாக மாறும் சூழ்நிலையை நாம்**

காணுகிறோம். இதன் முன்னோடியாக இலங்கையில் 1974 ம் ஆண்டில் நடந்த 20 வது பொது நல நாடுகளின் மாநாட்டுக்கு வருகைதந்த பிரதிநிதிகளுக்குத் தந்தை செல்வநாயகம் ஓர் அறிக்கை சமர்ப்பித்தார். ஆங்கிலத்தில் அமைந்த அதன் தமிழாக்கத்தை திரு: ச. பெ. வரதராசன் அவர்கள் "இலங்கைத் தமிழரின் நீண்ட பயணம் உலக நாடுகள் கைகொடுக்க வேண்டும்" என்ற தலைப்பில் இங்கு தமிழ் மக்களுக்கு தந்துதவுகிறார். அவருக்கு எங்களின் பாராட்டும், நன்றியும் உரியது. 1974 ம் ஆண்டுக்குப் பின் தமிழ் இனத்தின் சிந்தனை, தெளிவும், திடமும் பெற்று ஈழத்தமிழ்நாடு தனி நாடாக வேண்டும் என்ற மாற்றமுடியாத முடிவுக்கு வந்துள்ளது. நாம் உலக மேடையில் தொடங்கிய பிரசாரத்தை இப்பிரசுரம் தமிழ் மக்களுக்கு எடுத்துக் காட்டும்.

இங்ஙனம்,

பா. உ. கோங்பாய்.

68, குரேசெற் ஒழுங்கை,
கண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
9-4-1977

இலங்கைத் தமிழ்மக்களின் சார்பில் எல்லாப் பிரதி நிதிகளுக்கும் வணக்கம். வாழ்த்துக்கள்.

உங்கள் வரவு நல்வரவாகுக!

படிப்படியாக மனித உரிமைகள் மறுக்கப்பட்டும், இனப்பாகுபாடு காட்டப்பட்டும், வேறு நடவடிக்கைகளி னாலும், இறுதியில் இன ஒழிப்புச் செய்யப்படவிருக்கும் இலங்கைத் தமிழரின் இன்றைய நிலைபற்றி உங்கள்மூலம் உலக மனச்சாட்சியை விழிப்படையச் செய்யலாம் என் கின்ற நம்பிக்கையில் இந்த அறிக்கை உங்களுக்குச் சமர்ப் பிக்கப்படுகின்றது.

இலங்கைத் தமிழர்கள் சிங்கள தேசிய இனத்தின் இருந்து பிரதேசம், மொழி, மதம், கலாச்சாரம் ஆகியவற்றி னால் முற்றிலும் வேறுபட்ட ஒரு தனித் தேசிய இனமாகும். (பின்னிணைப்பைப் பார்க்குக)

ஐரோப்பியர் கைப்பற்றிய காலத்தில் இலங்கை யில் மூன்று தனி அரசுகள் நிலவின வடக்கே ஒரு தமிழரசு, தெற்கே இரண்டு சிங்கள அரசுகள். 1619 இல் தமிழரசு போர்த்துக்கீசர் வசப்பட்டது. 1658 இல் ஒல்லாந்தர் கைப் பற்றி 1796 இல் அதை ஆங்கிலேயருக்குப் பறிகொடுத்தனர். 1815இல் ஆங்கிலேயர் கண்டி சிங்கள அரசைக் கைப்பற் றியதுடன் தீவின் முழுமையிலுள்ள மூன்று அரசுகளுக்கும் அதிபதிகளாயினர்.

வெவ்வேறாக இருந்த இப்பிரதேசங்கள் தனித்தனியாக நிர்வகிக்கப்பட்டு, 1833 இல் ஆங்கிலேயரால் ஒரு நிர்வா கத்தின்கீழ் இணைக்கப்பட்டன. இது நாட்டுமக்களின் சம்மத மின்றி நிர்வாக வசதிக்காகச் செய்யப்பட்டதாகும். கண்டிச் சிங்களவர் இந்த இணைப்பை ஆட்சேபித்தனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

இப்படியாக ஆங்கிலேயர் ஆங்கிலத்தை அரசமொழியாகக் கொண்டு ஒரு பொது நிர்வாக முறையைத் தீவு முழுவதும் திணித்தனர். இப்படியாக ஆண்டாண்டு காலமாகத் தனித்தனி வாழ்ந்த இரு இன மக்கள் ஒன்று சேர்க்கப்பட்டனர். சுதேசியத் தலைவர்களுடன் ஆங்கிலேயர் தமது அதிகாரத்தைப் பங்குபோடத் தயார் என்ற உண்மை தெரியவந்ததும், தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே உள்ள வேற்றுமை மேல்மட்டத்துக்கு வந்தது. 1945 இல் இந்த நாட்டு மக்களின் கையில் அதிகாரத்தை வழங்கும் வேளை வந்தபோது அமைச்சர் குழு ஒரு புதிய யாப்புக்குத் தங்கள் திட்டங்களைச் சமர்ப்பித்தார்கள். அவை இலங்கையிலுள்ள சிறுபான்மை மக்களை ஓர் அடிமை நிலையிலும், பெரும்பான்மையினரிடமிருந்து கையேந்தி நிற்கவேண்டிய நிலையிலும் நிறுத்துவதற்காகத் திட்டமிடப்பட்டவை என்று தமிழர்கள் ஏகோபித்த குரலில் அவற்றை நிராகரித்தனர்.

சோல்பரிப் பிரபு அவர்களின் தலைமையில் ஓர் அரச ஆணைக்குழு, ''அரசியல் சீர்திருத்தத்திற்கான ஆலோசனைகளைச் சீர்தூக்கிப் பார்க்கவும், ஆராயவும்'' இலங்கைக்கு அனுப்பப்பட்டது. ''ஒரு சார்பற்ற'' ''ஆங்கிலேயரிடமிருந்து நாட்டுமக்கள் கைக்கு அதிகாரம் வழங்கப்படும்போது சிறுபான்மையினர் மத்தியில் நிலவும் அச்சத்தையும் ஐயத்தையும் உணர்ந்த ஆணைக்குழு சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு அளிப்பது பற்றிய தேவையைத் தெரிந்துகொண்டனர்.''

சிறுபான்மையினரின் திருப்தி அவர்களுடைய நலன்களுக்காக மட்டுமல்ல, முழுத்தீவின் நலன்களுக்காகவும் அத்தியாவசியம் என்பதை அமைச்சர் குழு முற்றாக உணர்ந்துள்ளது என்ற நம்பிக்கையில் அமைச்சர் குழுவின் உத்தரவாதங்களை ஆணைக்குழுவினர் ஏற்றுக் கொண்டனர்.

மேற்கொண்டு ஆணைக்குழுவின் அடிப்படையில் ஆங்கிலேய அரசு ஒரு வெள்ளை அறிக்கையை வெளியிட்டது. ஆங்கிலேயரின் சட்டநடவடிக்கை எதுவும் சிறுபான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டாலே செயற்பாட்டுக்குரியதாகும் என்பதை இலங்கை அமைச்சர் குழுவுக்கு அது தெளிவுபடுத்தியது. சிங்களத் தலைவர்களின் வாக்குறுதிகள் உத்தரவாதங்கள்மூலம் சிறுபான்மையினரின் சம்மதம் பெறப்பட்டது. அவற்றின் போலித்தன்மைகள் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களின் நடவடிக்கைகளினால் புலனாயிற்று.

சிங்களத் தலைவர்கள் அவர்களால் அளிக்கப்பட்ட உத்தரவாதங்களுக்கு மதிப்பளிக்கவில்லை என்பது பற்றி சோல்பரிப் பிரபு அவர்களே பின்னர் ஏமாற்றமடைந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் பி எச். பாமர் எழுதிய ''பிளவுபட்ட நாடு இலங்கை'' என்ற நூலுக்கு முன்னுரை எழுதுகையில் சோல்பரிப் பிரபு குறிப்பிட்டுள்ளதாவது!

''இரு இனங்களுக்குமிடையே காலம்காலமாக நிலவிய விரோதம் பற்றி ஆணைக்குழு ஓரளவுக்கு அறிந்திருந்தது. ஆயினும் திரு. பாமரின் நூல் அன்று இருந்திருக்குமானால், இவ்வினப் பிரச்சினைக்கான ஒரு தீர்வுபற்றி ஆணைக்குழு அதிகம் நம்பிக்கை வைத்திருக்காது... எனக்கும் சகோதர ஆணைக்குழுவினருக்கும் விளைவுகள் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளன என்பது சொல்லத் தேவையில்லை.''

ஆங்கிலேய அரசினால் அமைக்கப்பட்ட நிர்வாக ஒற்றுமையைப் பாதுகாக்க முடியுமென்று நம்பிய தமிழர்கள் மூன்று குறிப்பிடத்தக்க ஆலோசனைகளை வழங்கினார்கள்.

## (அ) பிரதிநிதித்துவ சமத்துவம்:

இத்திட்டம் காலனித்துவ நாடுகளின் செயலாள ராக இருந்த டிவோன்சயர் பிரபுவினால் முன் வைக்கப் பட்டது. சட்டசபையில் சம பிரதிநிதித்துவத்துக்கான எங் கள் கோரிக்கை "எல்லா இனங்களுக்கும் மக்களுக்கும் அதி காரத்தைச் சமபங்கிடு செய்து ஓர் இனத்தின் கையில் அதிகா ரம் குவிந்துவிடாமல் தவிர்க்கப் பிரதிநிதித்துவத்தைச் சமநிலைப் படுத்தும் அடிப்படையில்" கோரப்பட்டது. சோல்பரி ஆணைக் குழு இதனை வழங்கவில்லை.

## (ஆ) சமஷ்டி அமைப்புக் கோரிக்கை:

இரண்டாவதாக, சுதந்திரம் பெற்ற ஒரு ஆண்டுக் கிடையில் தமிழர்களின் நிலை வெகு விரைவாகச் சீர ழிந்துவரும் வேளையில், சமஷ்டி அரசுக் கோரிக்கை முன் வைக்கப்பட்டது; ஓர் அரசின்கீழ் இரு இனங்களையும் வைத் திருக்க இதுவே ஒரேவழி எனக் கருதப்பட்டது.

மே 1926 இலும் அதற்கு முன்னரும் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா சமஷ்டி அமைப் பைப் பலமாக ஆதரித்தார். ஆயினும், தான் பத விக்கு வந்ததும் அதனை வழங்க மறுத்தார் என்பதை இங்கு மறந்துவிடலாகாது. 1926 ஜூலை 17 இல் 'சிலோன் மோர்னிங் லீடர்' என்ற பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்ட அவரது பேச்சின் சில பகுதிகள் பின்வருமாறு:

"பழைய வரலாற்றைப் பார்ப்போமானால், இலங்கை யில் ஆயிரம் ஆண்டுகாலமாக கண்டிச் சிங்களவர் கள் கீழ்நாட்டுச் சிங்களவர்கள், தமிழர்கள் ஆகிய மூன்று இனங்களும் வாழ்ந்திருப்பினும் அவர்கள்

ஒன்றாக இணைவதற்கான மனப்போக்கைக் காட்ட வில்லை. ஒருமுகப்படுத்தப்பட்ட ஒரு மத்திய அரசு தனியொரு தேசிய இனத்துக்கே பொருந்தும்...... ஆகவே எதிர்ப்புகள் பலவீனம் அடைந்த பின்னர் ஏதோ ஒரு வகையிலான சமஷ்டி அரசுதான் ஒரே மார்க்கம் என்பதை நான் நம்புகிறேன் ''

UNIVERSITY OF JAFFNA ... RY

## (இ) 1972 இல் புதிய அரசியற் திட்டமும், ஆறு அம்சத் திட்டமும் :

மூன்றாவதாக, இந்த ஆலோசனைகள் யாவும் நிராகரிக்கப்பட்டு 1972 இல் ஒருதலைப்பட்சமான ஒரு புதிய அரசியற் திட்டம் திணிக்கப்பட்டது. இத்திட்டம் சோல்பரித் திட்டத்திலுள்ள அற்ப பாதுகாப்புகளையும் பறித்ததுமல்லாமல் சிங்களவர் பௌத்தர் அல்லாத மக்கள்மீது மேலும் இடைஞ்சல்களைத் திணித்தது.

இந்நிலை தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தையும், தொழிற் சங்கங்களையும், கட்சி சார்பற்ற தமிழர் கூட்டணி என்ற கொடியின்கீழ் ஒருங்கிணைத்தது. இன்றைக்கு தமிழர் கூட்டணி தமிழர்களின் குரலாகக் கணிக்கப்படுகின்றது.

தமிழர் கூட்டணி இப்புதிய அரசியல் யாப்பை நிராகரித்ததுடன் தமிழர்களின் பிரதேச, மொழி, மத, கலாச்சார தனித்தன்மையைப் பேணிக்கொண்டு இரு இனங்களையும் ஒன்றாக வைத்திருக்க குறைந்தபட்சத் தேவையென ஆறு அம்சத்திட்டமொன்றை முன்வைத்தது.

பின்வருவன சம்பந்தமாக, தமிழ்மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற அரசியல் யாப்புத் திருத்தப்பட வேண்டுமென்று தமிழர் கூட்டணி கோரிக்கை விடுத்தது ;

(அ) அரசியல் அமைப்பில் சிங்களமொழிக்குரிய அதே இடத்தை தமிழ்மொழிக்கும் வழங்கப்படல்வேண்டும்.

(ஆ) இந்த நாட்டைத் தாயகமாக்கிக் கொண்ட எல்லாத் தமிழ்பேசும் மக்களுக்கும் பூரண குடிஉரிமைக்கான உத்தரவாதம் அரசியல் அமைப்பில் இடம் பெறவேண்டும். மக்களில் வெவ்வேறு வகுப்புகளும் அவர்களிடையே பாகுபாடும் இருத்தல் ஆகாது. எந்த அரசுக்கும் ஒருவனின் குடிஉரிமையைப் பறிக்கும் அதிகாரம் இருத்தலாகாது.

(இ) அரசாங்கம் மதசார்பற்றதாக இருத்தல் வேண்டும். எல்லா மதங்களுக்கும் சமமான பாதுகாப்பளித்தல் வேண்டும்.

(ஈ) அரசியல் அமைப்பு இனக் கலாச்சார அடிப்படையில் எல்லா மக்களுக்கும் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் அடிப்படை உரிமைகளை அளித்தல் வேண்டும்.

(உ) தீண்டாமையையும் சாதியையும் ஒழிப்பதற்கு அரசியல் அமைப்பு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(ஊ) அரசாங்கத்தின் கைகளில் அதிகாரம் என்றில்லாமல் மக்களின் கைகளில் அதிகாரம் என்றிருந்தால்தான் மக்கள் ஜனநாயகத்தில் பங்கு கொள்வது சாத்தியமாகும். அதற்கு ஜனநாயக சமூக சோசலிச சமூகத்தில் பன்முகப்படுத்தப்பட்ட அரசாங்க அமைப்பிலேதான் இது சாத்தியமாகும்.

சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும் சிங்களத் தலைமையுடைய ஒவ்வோர் அரசியல்கட்சியும் என்றோ எப்பொழுதோ எந்தவகையிலோ இக்கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டுள்ளன

என்பது தமிழர் கூட்டணியின் கோரிக்கைகள் நியாயமானவை என்பதைத் தெளிவாக காட்டுகின்றது. ஆயினும், இந்த அர சாங்கம் இத்திட்டத்தை ஆலோசனை செய்யத்தானும் எண்ண வில்லை,

தமிழர்கள் ஒரு நீண்டபயணம்செய்து இரு இனங்கள் ஒன் றுக வாழமுடியாவிட்டால் பிரிந்து தானுக வேண்டுமென்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார்கள். பிரிவினைக்கு வேளை வந்து விட்டதா? அதுவே இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையாகும்.

## புதிய காலனித்துவம்

*சிங்களத் தலைவர்களுக்கு ஒரு குறிக்கோள் மட்டுந்தான் உண்டு, தமிழ் இன ஒழிப்பை உள்ளடக்கிய ஒரு மதத்தை (அதாவது பௌத்தம்), ஒரு மொழியை (அதாவது சிங் களம்) கொண்ட ஒரு சிங்கள அரசை நிறுவுவதேயாகும். 27-8-74 சிலோன் டெயிலி நியூஸ் பத்திரிகையில் இன்றைய அரசின் அமைச்சர்களில் ஒருவரின் பின்வரும் பத்திரிகை அறிக்கை அதனை உறுதிப்படுத்துகின்றது.*

> ''முன் தனித்திருந்த இந்தியத் தமிழர்களில் பலர் இன்று சிங்களம் கற்பதோடு எங்கள் மதத்தையும் பெயர்களையும் சுவீகரித்துக் கொண்டிருக்கிறாகள் என்பது இன்றைய நிதர்சன உண்மை. சமூகக்கலப்பில் இது ஒரு பகுதி யாகும்''.

*(வீரிவஞ்சி,) மேற்கண்ட கொள்கையைச் செயல் படுத்தப்படும் ஆறு சந்தர்ப்பங்களைக் கொஞ்சம் விரிவாகவும் ஏனையவற்றைப் பட்டியலாகவும் தருகிறோம்.*

# 1. குடியுரிமையும் வாக்குரிமை மறுப்பும்

சுதந்திரமடைந்த சில மாதங்களுக் கிடையிலேயே தமிழர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் மறப்பதில் சிங்களத் தலைவர்களுக்குச் சிரமம் இருக்கவில்லை. ஏனைய இலங்கையரைப் போல் சுதந்திரத்துக்கு முன்னர் சகல உரிமைகளையும் அனுபவித்த பத்து இலட்சம் தமிழர்கள் 1948 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டம் 18 இன் மூலம் நாடற்றவர்களாக்கப்பட்டனர்கள்.

தமிழர்கள் அனைவரையும், முஸ்லீம்களையும்கூட இந்தச் சட்டம் பாதித்தது. அரசாங்கத்தோடு தொடர்புடைய பல விஷயங்களில் தமிழ், முஸ்லீம் பெயரை உடையவர்கள் தங்கள் குடியுரிமையை ஊர்ஜிதப்படுத்தவேண்டி ஏற்பட்டது, அவற்றுள் சில பின்வருமாறு:

(அ) அரசாங்கத்துறையில் உத்தியோக வாய்ப்பு.

(ஆ) கடவுச்சீட்டு முதலான பிரயாண ஆவணங்கள் வழங்கல்.

(இ) குடியுரிமைச் சான்றிதழ் வழங்கல்.

(ஈ) அரிசிப் பங்கீட்டுப் புத்தகம் வழங்கல்.

(உ) வாக்காளர் இடாப்பில் பெயர்களைப் பதிவு செய்தல்.

(ஊ) பங்குகளையோ ஆதனங்களையோ இன்னொருவர் பெயருக்கு மாற்றிப் பதிவுசெய்தல்.

(எ) இலங்கை வர்த்தகர் என ஒருவரைப் பதிவு செய்தல்.

(ஏ) இலங்கையருக்கென முழுமையாகவோ பகுதியாகவோ ஒதுக்கப்பட்ட இதர துறைகள்.

அடுத்த ஆண்டில், 1949 ஆம் ஆண்டு இலங்கை (பாரா ளுமன்ற) தேர்தல் திருத்தச் சட்டம் இல. 48 நிறைவேற் றப்பட்டு அதே தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது: "இலங்கை சட்ட நிரூபண சபையில் (முழுச் சிங்கள) அமைச்சர் குழு ஆங்கில அரசுடன் சுதந்திரத்திற்காகப் பேச்சுவார்த்தை நடாத்திய எச்சந்தர்ப்பத்திலாவது இலங் கைத் தமிழர்களின் பாதிப்பேரின் வாக்குரிமையைப் பறிக் கும் நோக்கத்தை வெளிக்காட்டவில்லை, அதற்கு மாறாக அரசியல் அமைப்புச் சீர்திருத்த அறிக்கையில் அவர்கள் வகுத்த திட்டத்தின்படி சிங்களவர்களுக்கு 58 ஆசனங்க ளும், இலங்கைத் தமிழர்களுக்கு 15 ஆசனங்களும், இந்தி யத் தமிழர்களுக்குப் 14 ஆசனங்களும் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்தனர்."

சீரழிந்த நிலையைப் பின்வரும் அட்டவணை காட்டும்:

மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை

| இனம் | 1947 ஆசனங்களின் சதவீதம் | 1952 ஆசனங்களின் சதவீதம் | 1956 ஆசனங்களின் சதவீதம் | 1960 மார்ச் ஆசனங்களின் சதவீதம் | 1960 ஜூலை ஆசனங்களின் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 67 | 73 | 73 | 78 | 77 |
| இலங். தமிழர் | 13 | 12 | 12 | 11 | 11 |
| இந்தியத்தமிழர் | 07 | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| முஸ்லீம் | 06 | 08 | 07 | 06 | 07 |

மேற்கூறிய புள்ளிவிபரம் பிரதிநிதித்துவத்தில் சிறு பான்மையினருக்குச் சாதகமாக அமைக்கப்பட்ட ஓர் அர சியல் அமைப்பு துஷ்பிரயோகத்தின்மூலம் பெரும்பான்மை யினருக்குச் சாதகமாக அமைந்ததைக் காட்டுகின்றது.

## 2. தமிழ்ப் பிரதேசங்களில் ஊடுருவல்

பரம்பரைத் தமிழ்ப் பிரதேசங்களில் அரசாங்க ஆதரவுடன் குடியேற்றத் திட்டங்களை நடாத்தி சிங்கள வாக்காளர்கள் பலத்தை அரசாங்கம் அதிகரிக்கச் செய்தது. சுதந்திரம் பெற்ற சில வருடங்களுக்கிடையிலேயே தமிழ்ப் பிரதேசமான கிழக்கு மாகாணத்தில் குடியேற்றத்திட்டம் தீவிரப்படுத்தப்பட்டது. 1950 ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் ஒரு சிங்கள உறுப்பினரைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பப் போதுமான அளவுக்குச் சிங்களவர்கள் அங்கு குடியேற்றப்பட்டிருந்தார்கள்.

குடியேற்றங்கள் தவிர, தமிழ்ப் பிரதேசங்களில் தமிழர்களுக்கு இல்லாமல் சிங்களவர்களுக்குக் காணிகள் பெற விசேட அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

அரச காணிகளில் சட்டவிரோதமாகச் சிங்களவர் குடியிருப்பது ஊக்குவிக்கப்பட்டு, சட்டமுறையாக்கப்பட்டது. தமிழர்களோ தண்டிக்கப்பட்டு விரட்டப்பட்டார்கள். இவை யாவும் ஒரு குடிமக்களின் இயற்கையான நடமாட்டமல்ல. ஆனால் ஓர் அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்டுச் செயற்படுத்தப்பட்டவையாகும்.

## 3. மொழி

சகோதர பிரஜைகளுடன் சமத்துவ அடிப்படையில் தங்கள் மொழியை உபயோகிக்கும் உரிமை தொடர்பாகவே தமிழர்கள் பலத்த ஏமாற்றத்தையும் அவமானத்தையும் அடைந்திருக்கின்றார்கள். 1956 வரை தமிழும் சிங்களமும் சம அந்தஸ்து உடையனவாக இருக்கும் என்பதில் சந்தேகம் இருக்கவில்லை. சட்டநிருபண சபையில் உத்தியோக மொழியாகச் சிங்களமும், தமிழும் இருக்குமென்றொரு தீர்மானமே பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் காலம் சென்ற எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா கூறியதாவது:

"பொதுவாகச் சொன்னால் ஒரு தேசிய இனத்தின் முக்கிய கூறு மொழி என்பதில் ஐயம் இல்லை. நூற்றாண்டு காலமாக ஒரு மக்களின் வீரம், அபிலாசைகள், எதிர்பார்ப்புக்கள் பாதுகாக்கப்படுவது மொழி என்னும் சாதனத்தின் ஊடாகத்தான். ஒரு மனிதனுடைய உணர்ச்சிகள், உளவியல் பண்புகள், கலாச்சாரம் ஆகியன ஒரு மொழியினூடாகத்தான் உருவம் பெறுகின்றன. அதனால்தான் தேசிய இனத்தின் முக்கிய கூறு மொழியாகும்."

"சிங்களத்தை மட்டும் உத்தியோக மொழியாக்குவதன் நோக்கம் என்ன? ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை உத்தியோக மொழியாக வைத்திருப்பது சிரமம் என்பது தான் காரணமென்றால் இரண்டுக்கு மேற்பட்ட உத்தியோக மொழிகளை வைத்துக்கொண்டு திருப்திகரமாக இயங்கும் நாடுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்...... தமிழ் மொழியை ஓர் உத்தியோக மொழியாக ஏற்றுக்கொள்வதில் எவ்வித தீமையையும் நான் காணவில்லை. நிரயமான எல்லைக்குள் பல இனங்களுக்கிடையேயும் நம்பிக்கையையும் நல்லுறவையும் ஏற்படுத்த இது அவசியம். இரண்டாவதாக, நான் கூறியதில் இருந்து இரு மொழிகளையும் உத்தியோக மொழிகளாகக் கொள்வதற்கு எனக்கு எவ்வித

மறுப்பும் இல்லை. அத்துடன் அதனால் ஏதாவது சிரமமோ ஆபத்தோ தீமையோ விளையும் என நான் கருதவில்லை.'' (உத்தியோகபூர்வ அறிக்கை, சட்டநிருபண சபை மே 25, 1944. தொகுதி 1. பந்தி 809).

1956 உத்தியோக மொழிச் சட்டம் இல. 33 ''இலங்கையின் ஒரே உத்தியோக மொழியாக சிங்களம் மட்டும்'' என்று வரையறை செய்தது. இதைத் தமிழர்கள் பெரிய துரோகம்எனக் கருதியதுடன் இன்றுவரை தமிழ்மொழிக்குச் சம அந்தஸ்துக்காகப் போராடுவதைக் கைவிடவில்லை.

1961 இல் தமிழ்மக்கள் தமிழ்ப் பிரதேசங்களின் பிரதான பட்டணங்களான மட்டக்களப்பு, திருக்கோணமலை, வவுனியா. மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள அரசாங்கக் காரியாலயங்களுக்கு முன்னால் 57 நாட்களாகச் சத்தியாக்கிரகம் செய்து நிர்வாகத்தை இயங்க விடாமல் தடுத்தனர்.

அரசாங்கம் அவசரகாலநிலைமையைப் பிரகடனப்படுத்தி அப்பிரதேசங்களில் முப்படைகளின் பயங்கர ஆட்சியைக் கட்டவிழ்த்துவிட்டது. தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் சேர். கந்தையா வைத்தியநாதன் போன்ற பிரபல தமிழர்களையும் தடுப்புக் காவலில் வைத்தனர். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழி உபயோகத்திற்கென பாராளுமன்றம் சில ஏற்பாடுகளைச் செய்திருப்பினும் தமிழர்களுக்கு அவமானத்தையும் முட்டுக்கட்டையையும் வசதியீனத்தையும் உண்டுபண்ணும் வகையில் சிங்களம் மட்டுமே ஒரே மொழியாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

## 4. கல்வி

கல்வியில் தீவிர பாகுபாடு காண்பிக்கப்படும் குறிப்பிட்ட அம்சங்களின் பட்டியலைத் தருகின்றோம்:

(அ) கல்விச் சீர்திருத்தச் சட்டங்கள் இல. 5 1960, இல. 8 1961 மூலம் கிறிஸ்தவப் பாடசாலைகளையும், தமிழ்ப் பாடசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்றது. ஆனால் பௌத்த பிரிவேனா பாடசாலைகளை அரசாங்க மானியத்துடன் தனியார் பாடசாலையாக இயங்க அனுமதித்தது.

(ஆ) தமிழ்த் தோட்டத் தொழிலாளரின் குழந்தைகளுக்கான தோட்டப் பாடசாலை பொறுப்பேற்கப்படவில்லை, என்றும்போல் அவை இன்றும் மிகவும் தரம் குறைந்த நிலையிலேயே உள்ளன,

(இ) தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள தமிழ்மொழிமூலப் பாடசாலைகள், சிங்களமொழிமூலப் பாடசாலைகளாக மாற்றப்பட்டன. அதனால் அங்குள்ளவர்கள் சிங்கள மொழிமூலம் கற்கக் கட்டாயப்படுத்தப்பட்டார்கள்.

(ஈ) அரசு பாடசாலைகளைப் பொறுப்பேற்றபின், பெரும்பாலும் தமிழ் மாணவர்களாக இருந்த சில தென் இலங்கைப் பாடசாலைகள் சிங்களப் பாடசாலைகளாக மாற்றப்பட்டுள்ளன. தமிழ் மாணவர்களுக்கு வேறு எவ்வித வசதியும் அளிக்கப்படவில்லை,

(உ) வடக்கே, நான்கு பாடசாலைகளில் போதனாமொழி தமிழில் இருந்து சிங்களமாக மாற்றப்பட்டது.

(ஊ) உயர்கல்வி வாய்ப்பு: இவ்வரசாங்கம் பதவி ஏற்றதில் இருந்து இனபாகுபாடு காண்பிக்கப்படுகின்றது. 1970 இல் தமிழ் மாணவர்களிடமிருந்து பல்கலைக்கழக அனுமதிக்கு உயர்ந்த தரம் எதிர்பார்க்கப்பட்டது: திறமை கைவிடப்பட்டது. கிராமப்புற மாணவர்களுக்கு சலுகைகொடுக்கும். போர்வையில் அரசாங்க அனுமதியில் ஓர் இன அடிப்படையை புகுத்தியது. 1970 இல் சிங்கள-தமிழ் மாணவர்கள் பெறவேண்டிய குறைந்தபட்ச மொத்தப் புள்ளிகளைக் கீழே தருகின்றோம்.

பல்கலைக்கழக அனுமதிக்கு பெறவேண்டிய மொத்தப் புள்ளிகள்

| | (அ) தமிழர் களிடமிருந்து | (ஆ) சிங்களவர் களிடமிருந்து |
|---|---|---|
| பேராதனை — பொறியியல் | 250 | 225 |
| கட்டுப்பெத்தை – பொறியியல் | 232 | 212 |
| மருத்துவம், பல் வைத்தியம் | 250 | 229 |
| விவசாயம், மிருகவைத்தியம், உயிரியல் விஞ்ஞானம் | 184 | 174 |
| பௌதிக விஞ்ஞானம் | 204 | 183 |
| கட்டிடக்கலை | !94 | 180 |

அரசாங்கம் இது தவறு என்பதை ஒப்புக்கொண்டாலும் இப்போது பிரதேசரீதியிலும், மொழிரீதியிலும், தரப்படுத்தல் என்ற ஓர் இரகசியத்திட்டத்தின்மூலம் இக் குறிக்கோளை நிறைவேற்றி வருகின்றது. உயர் கல்விக்கு தரத்தின் அடிப்படையில் தகுதியுடைய தமிழ் மாணவர்களின் அனுமதியைக் கட்டுப்படுத்துவதே இதன் விளைவாகும்.

## 5. தமிழர்களுக்கு எதிராக வன்முறை

1956, 1957, 1958, 1961, 1974 ஆம் ஆண்டுகளில் தமிழர்கள் வன்முறைகளுக்கு இலக்காகியிருக்கின்றார்கள். 1958இல் தமிழ்ப்பிரதேசங்களுக்கு அப்பால் வாழ்ந்த தமிழர்கள் சிங்களக் காடையரினால் தாக்கப்பட்டு கொலை, கொள்ளை, சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். 1961 இல் சத்தியாக்கிரகிகளைக் கலைக்க அது பயன்படுத்தப் பட்டிருக்கின்றது. 1974 இல் ஓர் அரசியல் சார்பற்ற கலாச் சார உரை ஒன்றைக் கேட்டுக்கொண்டு இருந்த ஒரு பெரும் கூட்டத்தைக் கலைக்க வன்முறை பயன்படுத்தப்பட்டது. ஒன்பதுபேர் கொல்லப்பட்டார்கள். குறிப்பிட்ட அளவைத் தவிர பரந்த அளவில் பொலிசாரும் இராணுவமும் அடிக் கடி வெறியாட்டம் ஆடி பயங்கரத்தையும் வன்முறையை யும் பரப்பினார்கள்.

## 6. பட்டினியும் சாவும்

இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பு தேயிலை, இறப்பர், தெங்குத் தோட்டத் தொழில்களாகும். இந்த நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து இந்த நாட்டின் பொருளாதார வாழ்வுக்கு ஜீவித இரத்தத்தை அளிக்கும் உழைப்பாளிகளான தோட்டங்களில் உள்ள தமிழ்த் தொழி லாளிகள் அரசியல், சமூக, பொருளாதார தீண்டாச்சாதியாக தேசிய சட்டங்களின் மூலம் ஆக்கப்பட்டிருப்பது பெரும் சோகக் கதையாகும். அவர்களுக்கு அளிக்கப்படும் உணவுப் பொருள் குறைப்பு, குறைந்த ஊதியம், வேலையின்மை, பட்டினி காரணமாக தோட்டங்களில் குவிந்திருக்கும் இந்தப் பத்து இலட்சத் தமிழர்களின் பிரச்சினை இனக்கொலை முயற்சியின் தன்மையைப் பெற்று இருக்கின்றது.

இதன் கூட்டு மொத்தமான விளைவு அவர்களுடைய மரண விகிதத்தின் தீவிர அதிகரிப்பாகும். தோட்டத் தொழிலாளர்களும் அவர்களுடைய குடும்பங்களும் பட்டணங்களுக்குச் சென்று உணவுக்காகப் பிச்சை எடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

தமிழர்களை இன்னல்படுத்தும் வேறுசில வழிவகைகளைப் பட்டியல்படுத்துவதுடன் முடித்துக்கொள்கிறோம்:

1. அரச சேவையிலும் அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுத்தாபனங்களிலும் தமிழர்களுக்கு வேலை வாய்ப்பில் சமசந்தர்ப்பத்தை மறுத்தல்.

2. அரசாங்க அங்கீகாரம்பெற்ற பாடநூல்கள்மூலம் தமிழர்களுக்கு எதிராக இடையறாத பிரசாரம்.

3. தமிழ்ப்பிரதேசங்களில் தொடர்ந்து பொலிஸ், இராணுவ நடவடிக்கைகள்.

4. அமைதியாகக் கூட்டம்கூடும் உரிமை மறுப்பு.

5. நாட்டைவிட்டு வெளியேற பல தமிழர்களுக்கும், தமிழ்த் தலைவர்களுக்கும் தடை.

6. சிறுபான்மையினர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க அரசியல் யாப்பில் காப்புகள் இன்மை.

7. நீதி நியாயமின்றிக் கைதுசெய்தலும் தடுப்புக்காவலில் வைத்தலும்.

(இப்போது 42 தமிழர்கள் அப்படித் தடுப்புக்காவலில் இருக்கிறார்கள்)

8. கைது செய்யும்போதும், தடுப்புக்காவலிலும் குரூரமாகவும் மனிதத்தன்மையற்றும் நடாத்துதல்.

9. பௌத்தத்தை " பாதுகாக்கவும் வளர்க்கவும் " அரசாங்கத்தின் கடமையாக்கும் முறையில் " பௌத்தத்துக்கு முதலிடம் அளித்தமை ".

10. சென்ற இரண்டு ஆண்டுகளாக இடைத்தேர்தலை வன்மத்துடன் நடாத்த மறுத்து காங்கேசன்துறைத் தொகுதியில் உள்ள 50,000 பேருக்குப் பிரதிநிதித்துவ உரிமை மறுப்பு.

## பொதுநல அமைப்பு நாடுகளும் தமிழர்களும்

இன்று இலங்கை இரு தேசிய இனங்கள் கொண்ட ஒரு நாடு. தமிழினம் தன்னுடைய சுயநிர்ணய உரிமையை கோருகின்றது தமிழர் பிரச்சினை ஓர் உள்நாட்டு விவகாரமல்ல. இந்தியாவின் முதலாவது மகாதேசாதிபதி காலம் சென்ற ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியார் கூறியிருப்பதாவது:

" அந்தரங்க அநீதிகள் வீட்டுச் சுவர்களுக்குள்ளே இடம்பெறுகின்றன. பகிரங்கஅநீதிகள் நாடுகளின் எல்லைக்குள்ளேயே இடம் பெறுகின்றன. நாடுகளின் எல்லைகள் பரிசுத்தமானவை என்று உலக அபிப்பிராயம் கருதுமேயானால், முழுமையாக உலகம் முன்னேறுவதற்குச் சந்தர்ப்பமே இருக்காது. கொடுங்கோன்மை உலக அங்கீகார உரிமை பெற்றுவிடும்.' '

ஆகவே தமிழர் பிரச்சனை இலங்கை அரசின் உள்நாட்டு விவகாரமெனக் கருதும் முயற்சி இந்த நாட்டின் அரசியல் சமூக உண்மைகளை காணமறுப்பதற்கு சமன். பல பயங்கரங்கள் செறிந்த இந்த நிலைமை கட்டுமீறிப் போகின்றது என்பதில் எள்ளளவுக்குச் சந்தேகம் இல்லை. துரதிஷ்டவசமாக இதை ஒத்த நிலைமைகள் பல நிகழ்ந்திருக்கின்றன. பேச்சுவார்த்தை, இணக்கம் சமாதான முறைகளின்மூலம் தங்களுடைய உரிமைகளைப் பெறமுடியாது என்று இலங்கைத் தமிழர்கள் மனமுடைந்து வருகின்றார்கள். மனத்தாங்கலும், மனக்குலைவும் பிரச்சனைகளைச் சுற்றி உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றன. இன்றோ நாளையோ மீளமுடியாத நிலை ஏற்பட்டுவிடும்.

ஏற்கனவே சீர்கெட்டிருக்கும் நிலை மேலும் மோச மாவதைத் தடுக்க உடனடி நடவடிக்கையும் உதவியும் தேவை என்ற நிலை இன்று இலங்கையில் இருப்பது தெளிவு. மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் பொதுநலவாய நாடுகளில் உள்ள சிறுபான்மைத் தேசிய இனங்களின் பிரச்சனைகள் இடம் பெறவிட்டாலும் இவற்றை ஆராயமுடியுமா என்ற கேள்வி எழும். நிகழ்ச்சிநிரலில் இல்லாதபோதும் காஸ்மீர் இன ஒதுக்கல் போன்ற பிரச்சனைகளை மாநாடு முன்னர் ஆராய்ந் துள்ளது. மனிதாபிமானத்தின் பெயரால் இந்த 20 ஆவது மகாநாட்டில் கடுகதியில் சீரழிந்துவரும் நிலைமைகாரண மாக இலங்கைத் தமிழர்கள் பிரச்சனை ஆராயப்படவேண் டியதே. சட்டபூர்வமான உரிமைகளுக்காக பலரும் உயிரைத் தியாகம் செய்த பின்னரே, அவலநிலையில் உள்ள சிறிய நாடுகளுக்கு உலக நாடுகள் உதவ முன்வந்திருக்கின்றன என்பது சமீபகால வரலாறு.

> "பாராளுமன்ற ஜனநாயக இலட்சியங்களைப் பின்பற்றி தனிமனித சுதந்திரத்திற்கும், உரிமைகளுக்கும் சட் டங்களுக்கும் மதிப்பளித்து கலாச்சார, சமய இன வேறுபாடுகள் அற்று பொதுநலன் கருதி ஒன்றிணைந்த பொதுநலவாய பாராளுமன்றத்தினரின் சங்கமே பொ. பா. ச. ஆகும்."

இந்த மாநாட்டில் கூடியிருக்கும் பிரதிநிதிகளின் அனுதாப உணர்வுகள் இலங்கைத் தமிழர்கள் பிரச்சனைகளுக்கு கிடைக்கு மென்றும் இப்பிரச்சனைகளைத் தீர்க்க தங்களுடைய நல்லெண் ணத்தைப் பயன்படுத்துவார்கள் என்றும் நாங்கள் நம்புகின் றோம்.

சா. ஜே. வே. செல்வநாயகம் கியூ. சி.
தலைவர்,
தமிழர் கூட்டணி.

16, அல்பிரட் ஹவுஸ் ஹார்டின்
கொழும்பு - 3,
இலங்கை.

## இவ்வறிக்கை ஒப்படைக்கப்பட்ட நாடுகளாவன :
## (1974)

1. அவுஸ்திரேலியா
2. பகாமாஸ்
3. வங்காள தேசம்
4. பாபடோஸ்
5. பொற்ஸ்வானு
6. கனடா
7. பிஜி
8. காம்பியா
9. கிறனடா
10. குயானு
11. இந்தியா
12. ஜமேக்கா
13. லெஸோத்தோ
14. மலாவி
15. மலேசியா
16. மோல்ற்ரு
17. மொறீஷஸ்
18. நவுறு
19. நியூசிலாந்து
20. சியராலியோன்
21. சிங்கப்பூர்
22. இலங்கை
23. தான்ஸானியா
24. ரொங்கா
25. றினிதாத்தும் ரொபாகோவும்
26. ஐக்கிய இராச்சியம்
27. மேற்கு சமோவா
28. சாம்பியா
29. பெலீஸ்
30. பேமியூடா
31. பிரித்தானிய வேஜின் தீவுகள்
32. குக் தீவுகள்
33. ஜிப்ரால்ரர்
34. கில்பேர்ட் தீவுகளும் எலிஸ் தீவுகளும்
35. மான் தீவு (ஐஸ் ஒவ் மான்)
36. ஜேர்ஸி
37. வட அயர்லாந்து
38. பப்புவா நியூகினி
39. ரேக்ஸ் தீவுகளும், கக்கோஸ் தீவுகளும்




1975ம் ஆண்டு ஈழத்தில் நடைபெற்ற அனைத்துலக பாராளுமன்ற ஒன்றியத்தின் வசந்தகால கூட்டத்திற்கு வருகைதந்த பேராளர்கட்கு ஈழத்தமிழர் சார்பில் மூதறிஞர் தந்தை செல்வாவினால் ஒப்படைக்கப்பட்ட அறிக்கை.

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் இணைப் பொருளாளரும் சிந்தனைச் சிற்பியுமான**

உயர்திரு. சி. கதிரவேற்பிள்ளை பா. உ. கோப்பாய்
B A. Hons., Phil. (Cey ) Advocate
அவர்களின் மதிப்புரை

ජාතික රාජ්‍ය සභාව
தேசிய அரசுப் பேரவை
National State Assembly



ஒரு நாடு சுதந்திரம் பெற்று வாழ விரும்புவதற்குக் காரணம் காட்டவேண்டியதில்லை. ஆனால் ஐரோப்பிய ஏகாதிபத்திய ஆட்சியில் இருந்து நாடுகள் விடுதலை பெற்றுத் தனித்து இயங்குகின்ற இன்றைய சூழ்நிலையில் ஈழத் தமிழ் நாட்டின் நிலையை விளக்க வேண்டியிருக்கிறது; ஏனெனில் ஐரோப்பிய ஏகாதிபத்திய ஆட்சியால் மறைக்க முடியாத உண்மைகள் அடுத்து நடக்கும் சிங்கள ஏகாதிபத்திய ஆட்சியால் விளக்கம் இன்றி இருக்கின்றன, ஐரோப்பியர் இங்கு வருமுன் ஈழத்தமிழ்நாடு சுதந்திர, தனிநாடாக இருந்தது. போத்துக்கீசர் கையிலே போர்க்களத்தில் தமிழ் இனம் தனது நாட்டையும், சுதந்திரத்தையும், அரசுரிமையையும் இழந்தது. போத்துக்கேயருக்குப்

பின் ஒல்லாந்தர் ஆண்டனர்; அவர்களுக்குப் பின் ஆங்கிலேயர் எஞ்சி இருந்த கண்டி சிங்கள இராச்சியத்தையும் 1815ல் கையேற்றனர். அவ் ஆங்கிலேயர்தான் இச் சிங்கள, தமிழ் நாடுகளை 1833ல் ஒரு நிர்வாகத்தின்கீழ் இணைத்து முழு இலங்கையையும் முடிக்குரிய ஒரே கொலனியாக்கினார்கள். இதனால் தமிழ் இனமும் சிங்கள இனமும் ஒரு இனமாகவில்லை. தமிழ் நாடும் சிங்கள நாடும் ஒரு நாடாகவில்லை; 1972ம் ஆண்டிலே சிங்கள ஆட்சி இலங்கை மக்களின் அரசுரிமை என்ற அடிப்படையில் தமிழ் மக்களுடைய சம்மதமின்றி ஒரு குடியரசு அமைப்பை இலங்கை முழுவதற்கும் இயற்றிச் சுமத்தினார்கள். அதாவது; சிங்கள நாட்டுக்கு மட்டுமன்றித் தமிழ் நாட்டுக்கும் சேர்த்து அமைத்தார்கள், அதன்படி தமிழ்நாட்டையும் ஆளுகிறார்கள். இதுவே இன்று வலு பெற்ற சிங்கள ஏகாதிபத்தியம். ஆனால், தமிழ் இனம் மீண்டும் சுதந்திர இனமாக வாழ விரும்புகிறது. இதன் அடிப்படைகள் உலகம் ஏற்றுக்கொள்ளக்கூடியவை.

1. எல்லா இனங்களுக்கும், மக்களுக்கும் அடிப்படை உரிமையான சுயநிர்ணய உரிமை.

2. 1619ல் இழந்த நாட்டையும், சுதந்திரத்தையும், அரசுரிமையையும் கொலனித்துவம் நீங்கி மீளப் பெறுதல்.

3. சிங்கள இனமும் தமிழ் இனமும் இலங்கையில் பிரிந்து வாழ்ந்த சரித்திரம்.

4. சிங்கள இனம் இருபத்தைந்து வருட காலமாகத் தமிழ் இனத்தை அடக்கி, உரிமை

பறித்து ஆளும் வகையினால் பிரிந்து விடுதலை பெற்று வாழவேண்டிய அவசியமும்; தவிர்க்க முடியாததும் ஆகும்.

5. 1972 ல் ஏற்றுக்கொண்டபடி இலங்கை மக்களின் அரசுரிமை ஆங்கிலேயரின் அரசுரிமை விலக்கப்பட்டபோது மீண்டதினால் தமிழ் இனத்துக்கும் தமது அரசுரிமை தனியே மீண்டுள்ளது, என்ற மறுக்க முடியாத முடிவு.

ஆகவே 'தமிழ் ஈழம்' மீண்டும் தனி நாடாக மலர வேண்டும். தமிழ் மக்கள் விடுதலை பெற்றுச் சுதந்திர இனமாக வாழ வேண்டும். இதனை உலகம் முழுவதும் விளங்கி ஏற்று ஆதரிக்கவேண்டும் சுதந்திரத்துக்கு எவரும் என்றும் பொறுப்புள்ளவர்களே.

தந்தை செல்வநாயகம் வசந்தகால அனைத்துலகப் பாராளுமன்ற ஒன்றியத்துக்கு 1975-ஆம் ஆண்டு சமர்ப்பித்த அறிக்கையை நல்ல முறையில் தமிழ்மக்கள் வாசித்துப் பயன்பெறக்கூடியதாக திருக்கோணமலையைச் சேர்ந்த திரு. ச. பெ. வரதராசன் "பிரிவினைதான் ஒரே வழி" என்ற தலைப்பில் தமிழ் ஆக்கம் செய்துள்ளார்கள். அவருடைய முயற்சியைப் பாராட்டி நாம் நன்றி கூறுகிறோம். இப்படி, தமிழ் இனத்துக்கு அவருடைய சேவை மேலும் ஓங்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

68, குரூஸ்சேற் ஒழுங்கை
கண்டுக்குளி,
யாழ்ப்பாணம்
30-3-1977

இங்ஙனம்

பா. உ. சேப்பாம்

OF JAFFNA UNIVERSITY ARCHIVES

மதிப்புக்குரிய பிரதிநிதிகளே !

ஈழத் தமிழர்களின் பெயரால் நாங்கள் உங்களை அன்புடன் வரவேற்கிறோம், இந்நாட்டில் உள்ள இரண்டாவது பெரிய தேசிய இனத்தின் ஒரே பிரதிநிதித்துவ அமைப்பான தமிழர் கூட்டணி தமிழ்த் தேசிய இனத்தின் சார்பில் உங்களை வாழ்த்துகின்றது.

தமிழர்களுக்கு மிக முக்கியமான காலகட்டத்தில் இந்நாட்டுக்கு வருகை தந்திருக்கிறீர்கள், உலகத்திலுள்ள சுதந்திரம் விரும்பும் மக்கள் எல்லோருடைய தீவிர சிந்தனைக்கு உரிய ஒரு செய்தியைக் கொண்டு செல்லும் தூதுவர்களாக இருப்பீர்களென நம்பிக்கையுடன் இவ்வறிக்கையை உங்களுக்குச் சமர்ப்பிக்கிறோம். அந்தச் செய்தி இதுதான்: சுமார் கால் நூற்றாண்டு காலமாக அடுத்தடுத்து வந்த தனிச் சிங்கள அரசாங்கங்களால் காட்டப்பட்ட இனப் பாகுபாட்டையும், சுமத்தப்பட்ட அரசியல், சமூக பொருளாதார, கலாச்சார அடிமைத்தனத்தையும் எதிர்த்துத் தீரமுடன் போராடிய பின்னர் இன்று தங்களுடைய பழைய அந்தஸ்தை மீண்டும் பெற ஈழத் தமிழர்கள் துணிந்துள்ளார்கள்.

## வரலாறு:-

பிரித்தானியரிடமிருந்து இந்த நாடு சுதந்திரமடைந்ததிலிருந்து இருபத்தேழு ஆண்டுகளாக நிலவிய சிங்கள ஆட்சி எண்ணிக்கையால் கூடிய சிங்கள மக்களுடன் சமாதானமாகவும், கௌரவத்துடனும் ஒற்றையாட்சியில் கூடி வாழமுடியும் என்ற நம்பிக்கையைச் சிதைத்துவிட்டது. அத்துடன், பிரித்தானிய ஆட்சியினரால் எங்கள் விருப்பத்துக்கு மாறாக எம்மீது திணிக்கப்பட்ட செயற்கையான ஒற்றுமையை உதறித்தள்ளும் நிலையை உருவாக்கிவிட்டது. ஐரோப்பியர் கைப்பற்றிய காலத்தில் ஈழத்தில் தனித்தனியான மூன்று அரசுகள் நிலவின என்று வரலாறு கூறு

கின்றது. அதாவது வடக்கே ஒரு தமிழ் அரசும் தெற்கே இரண்டு சிங்கள அரசுகளும் இருந்தன. இம்மூன்று அரசு களும் கி. பி. 1619 — 1815 ஆண்டுகளுக்கிடையில் வெவ்வேறு காலத்தில், ஒன்றன்பின் ஒன்றாகப் போர்த்துக்கேயர், ஒல் லாந்தர், பிரித்தானியர் வசமாகின. ஐரோப்பியர்களாற்கூட இப் பிரதேசங்களை ஒன்றிணைக்க முடியவில்லை. அவர்களும் அவற்றை, தனித்தனியாகவே நிர்வகித்தனர். பிரதேச ஒருமைப்பாடோ அல்லது ஐக்கியமோ சமீபகால வரலா ருகும். 1833ல் தான் பிரித்தானியர் நிர்வாக வசதிக்காக இப் பிரதேசங்களை ஒரு நிர்வாக அமைப்பின் கீழ் இணைத் தனர். சுமார் நூறு ஆண்டு காலம் நிலவிய பிரித்தானிய ஆட்சியின் வசதிக்காகச் செய்யப்பட்ட இந்த ஏற்பாடு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட தமிழ் இறைமை பற்றி யதும் அதன் சுதந்திரம் பற்றியதுமான வரலாற்றை அழிக்க முடியாது. தமிழ் இனத்தை நிரந்தர அடிமைத்தனத்துக்கு இழிமைப் படுத்தவும் முடியாது. ஒரு சுதந்திர தனி அரசுரி மையை அவர்களே மீண்டும் பெறத் துணிந்துவிட்டார்கள்; எனவே, கலாச்சாரம், மொழி, பிரதேசம் ஆகியவற்றினால் சிங் களவர்களிலும் வேறுபட்டவர்கள் ஒரு தனித் தேசிய இனமான ஈழத்தமிழர்கள்,

## இடைத் தேர்தல்:

6-2-75ல் நடைபெற்ற காங்கேசன்துறைத் தொகுதி இடைத் தேர்தல் எங்கள் மக்களின் சுதந்திர ஆர்வத்தை வெளிக்காட்டி யது மட்டுமல்ல, எங்கள் வருங்கால நடவடிக்கைகளை தீர்மானிப்ப தாகவும் அமைந்தது. தமிழர் கூட்டணியின் கோரிக்கையின் பேரில் தமிழர் கூட்டணியின் தலைவன் என்ற முறையில் 1972ல் பிரகடனப்படுத்தப் பட்ட ''புதிய சிங்கள பௌத்த அரசியல் யாப்பை'' தமிழர்கள் நிராகரித்துவிட்டார்கள் என்பதை உலகத் துக்கும் நாட்டுக்கும் அரசுக்கும் எடுத்துக்காட்டுவதற்காக தேசியப் பேரவையில் எனது உறுப்புரிமையை இராஜினாமாச் செய்து இந்த இடைத் தேர்தலை எதிர்நோக்கினேன். (1972 அக்டோபர் 3ந் திகதி நான் பதவியைத் துறந்தேன் என்பதை எவ்வித

காரணமுமின்றி 6-2-75 வரை இரண்டாண்டுகளுக்கு மேலாக அரசு இத்தேர்தலைப் பின்போட்டது என்பதை இவ்விடத்தில் உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதுதான் இன்று இலங்கையில் நிலவும ஜனநாயகமாகும்.)

## இரட்டைப் பிரச்சினைகள்:

எங்களுடைய குறைந்தளவு கோரிக்கைகளைத்தானும் புதிய அரசியல் அமைப்பை யாத்தவர்கள் அதில் இடம் பெறச் செய்ய மறுத்ததிலிருந்து தமிழர் கூட்டணிக் கருத்தரங்குகளிலும், உள் நிர்வாகக் குழுக்களிலும் எமது தனியரசை மீண்டும் பெறுவது பற்றிய பிரச்சினைகள் தீவிரமாக விவாதிக்கப்பட்டு வந்திருக்கின்றன. தமிழ் விரோத நடவடிக்கைகளை அரசாங்கம் தீவிரமாக்க, பிரிவினை சார்பான அபிப்பிராயமும் வலுப்பெற்றது. அரசாங்கத்தின் விரோத மனப்பான்மையே இத்திட்டத்துக்கு உரமிட்டது. ''இதுவும் ஒரு மாற்றுத் திட்டம்'' என்று கருதப்பட்ட இத்திட்டம் இதுவே ''ஒரே மார்க்கம்'' என்றாகிவிட்டது, தமிழர் கூட்டணிக்கு அரசாங்கம் விடுத்த சவாலை ஏற்று தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கையை ஒரு தேர்தல் பிரச்சினையாக முன் வைத்த போது ''பிரிவினைக் கொள்கை'' தெளிவாக எதிரொலித்தது. ' தமிழ் நாட்டை மீள நிறுவுதல், புதிய அரசியல் யாப்பை நிராகரித்தல்'' ஆகிய இரட்டைப் பிரச்சினைகளை முன்வைத்து போரிட்ட இடைத்தேர்தலில் தமிழர் கூட்டணியின் அறை கூவலுக்கு தமிழ் மக்கள் சந்தேகத்துக்கிடமில்லாத வகையில் ஆதரவளித்தார்கள், இடைத் தேர்தல் முடிவு விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| வாக்காளர்கள் | 41,227 |
| வாக்களித்தோர் தொகை | 35,569 |
| தமிழர் கூட்டணி வேட்பாளர் | |
| திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் | 25,927 |

அரசாங்க வேட்பாளர்
திரு வி. பொன்னம்பலம்.......................9,457
சுயேட்சை (மூன்றாவது வேட்பாளர்).........185
பெரும்பான்மை வாக்குகள் 16,470

வாக்களித்தோரில் இட்டத்தட்ட 78% தமிழர் கூட்டணிக்குச் சாதகமாக வாக்களித்து மகத்தான பெரும்பான்மை வாக்குகளால், தமிழர் கூட்டணி, அரசாங்கத்தைத் தோற்கடித்தது. இத் தேர்தல் பிரச்சாரத்துக்கு அரசாங்கத்தின் பூரண வலுவும், வசதிகளும், அரசாங்க வேட்பாளருக்கு வாய்த்திருந்தும் இம் மாபெரும் வெற்றி ஈட்டப்பட்டது.

15-2-75ல் வெளியான செல்வாக்கு மிக்க, சுதந்திரமான வாராந்த "ட்றிபியூன்" பத்திரிகையிற் சரியாகக் குறிப்பிட்டிருப்பதுபோல "இந்த இடைத்தேர்தல் நிகழ்வதற்கு முன் இடைப்பட்ட காலத்தில் வடக்கே தமிழ் வாக்காளரை மிரட்டவும் விலைக்கு வாங்கவும், ஏமாற்றவும் அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஒரு தனிக் கதையாகும்."

## அதிகாரம்:

இவ்விடைத்தேர்தல் ஒரு பொதுசன வாக்கெடுப்புக்குச் சமமானதாக அதன் தன்மையைக் கொண்டு, கருதப்படுகின்றது, அதன் புதிய கொள்கையை பின்பற்றுவதற்கு தமிழர் கூட்டணிக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரம் சந்தேகத்துக்கிடமில்லாதது. "கார்டியன்" பத்திரிகையின் தென் கிழக்கு ஆசிய நிருபர் திரு: வோல்ட்டர் சுவாரிஸ் இவ்விடைத் தேர்தலில் சம்பந்தப்பட்ட இரட்டைப் பிரச்சினைகளை நுணுக்கமாக ஆராய்ந்துள்ளார். 24-2-75ல் வெளியான "கார்டியன்" பத்திரிகையில், "கிழக்கின் அயர்லாந்தில் திரிகள் தயார்" என்ற தலைப்பில் "அரசியல் அமைப்புக்கு எதிராக" என்னுடைய இராஜினாமாவைப்பற்றியும்" கூட்டணியின் புதிய பிரிவினைக் கொள்கையை அங்கீகரிப்பது என்று

இலங்கை முழுவதும் கருதப்படும் இம்மாபெரும் இடைத் தேர்தல் வெற்றியைப்'' பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். இவ்வெழுத்தாளர் முடிவில் ''தமது மக்களின் துவேஷ வெறியைக் கட்டுப்படுத்தக் கூடிய வலிமை பொருந்திய ஒரு சிங்களத் தலைவர் தோன்றாவிட்டால் தமிழர்களின் உள்ளக் குமுறல்கள் வன்முறையாக வெடிக்கத் தவறாது. சைபிரஸ் போன்ற அழகான இத்தீவு அதைப் போலவே இனப் போராட்டத்தினால் சித்திரவதைக்குள்ளாகும்'' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

இடைத்தேர்தல் முடிவை ஆராய்ந்த ''இந்து'' என்னும் இந்தியத் தினசரி 10-2-75ல் ''இலங்கையில் மோதல்'' என்ற தலைப்பில் ஆசிரியத் தலையங்கம் தீட்டியுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது: ''சிங்கள மக்களினால் வஞ்சிக்கப்படும் தமிழ்ச் சிறுபான்மையினரின் உணர்ச்சியின் ஆழத்தை இவ்விடைத் தேர்தல் முடிவு நிச்சயமாக எடுத்துக்காட்டியுள்ளது. சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து சிங்கள வகுப்புவாதக் கோரிக்கைகளின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்ற இலங்கைத் தலைவர்கள் குறுகிய நோக்காளர் ஆவர், தேசிய அரசுப் பேரவையிலிருந்த பெரும்பான்மை சிங்கள வாக்குகளைப் பயன்படுத்தி தமிழர்களை வஞ்சிக்கப் புகுத்தப்பட்ட புதிய அரசியல் அமைப்பு சிறுபான்மை இனத்தவர் தங்கள் மத்தியிலிருந்த வேற்றுமைகளை மறந்து கூட்டரசாங்கத்துக்கு எதிராக அணிதிரண்டு திடமாக மோதுவதற்கு இடமளித்திருக்கிறது.''

## ஆறு அம்சத் திட்டம்:

1956ல் ஒற்றையாட்சி அமைப்புடைய சோல்பரி அரசியல் திட்டம் புகுத்தப்பட்ட அன்றே இலங்கையில் இந்த இரு பெரும்பான்மை தேசிய இனங்களுக்கிடையே மோதல் ஆரம்பித்தன. சிங்களத்தை தனித் தேசிய மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும், பௌத்தத்தை அர

சாசன ஆதரவையும் பாதுகாப்பையும் அனுபவிக்கும் ''முதன்மை'' மதமாகவும் அழுத்தம் கொடுத்து 1972-ல் பிரகடனப்படுத்தப்பட்ட புதிய அரசியல் அமைப்பு தமிழர்களுக்கு மேலும் இடைஞ்சல்களை உண்டுபண்ணி சிக்கலைத் தீவிரமாக்கியது. இத்தகைய நெருக்கடியின் மத்தியில் பல தரப்பட்ட அரசியல் சார்புடைய தமிழர்கள் தங்கள் வேற்றுமைகளை மறந்து ஒரு கொடியின் கீழ் தமிழர் கூட்டணியில் திரண்டார்கள். இவ்விரு இனங்களையும் ஒன்றாக வைத்திருப்பதற்கு குறைந்தபட்சத் தேவையென்ற ஆறு அம்சத் திட்டமொன்றை தமிழர் கூட்டணி, அரசாங்கத்தின் பரிசீலனைக்குச் சமர்ப்பித்தது. அந்த ஆறு அம்சங்களாவன:

1. அரசியல் அமைப்பில் சிங்கள மொழிக்குரிய அதே அந்தஸ்து தமிழ் மொழிக்கும் வழங்கப்படல் வேண்டும்.
2. இந்த நாட்டைத் தமதாக்கிக் கொண்ட எல்லாத் தமிழ் பேசும் மக்களுக்கும் பூரண பிரஜா உரிமைக்கான உத்தரவாதம் அரசியல் அமைப்பில் இடம் பெற வேண்டும். பிரஜைகளின் வெவ்வேறு வகுப்புக்களும் அவர்களிடையே பாகுபாடும் இருத்தலாகாது. எந்த அரசுக்கும் ஒருவரின் பிரஜா உரிமையைப் பறிக்கும் அதிகாரம் இருத்தலாகாது.
3. அரசாங்கம் மதசார்பற்றதாயிருக்க வேண்டும், எல்லா மதங்களுக்கும் சமமான பாதுகாப்பு அளித்தல் வேண்டும்.
4. அரசியல் அமைப்பு இன, கலாச்சார அடிப்படையில் எல்லா மக்களுக்கும் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் அடிப்படை உரிமைகளை அளித்தல் வேண்டும்.
5. தீண்டாமையையும் சாதியையும் ஒழிப்பதற்கு அரசியல் அமைப்பு ஏற்பாடு செய்தல் வேண்டும்.
6. அரசாங்கத்தின் கைகளில் அதிகாரம் என்றில்லாமல் மக்களின் கைகளில் அதிகாரம் என்று இருந்தால்தான் மக்கள் ஜனநாயகத்தில் பங்குகொள்வது சாத்தியமாகும்.

அதற்கு ஜனநாயக, சமூக சோஷலிச சமூகத்தின் பன்முகப்படுத்தப்பட்ட அரசாங்க அமைப்பிலே தான் இது சாத்தியமாகும்.

இக் கோரிக்கைகளை அரசாங்கம் பரிசீலிக்க மறுத்தது மாத்திரமல்ல அரசாங்கத் தலைவர்களுடன் இக்கோரிக்கைகளை பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்த முன்வந்த தமிழர் கூட்டணித் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவும் மறுத்தது.

## தமிழ் விரோத நடவடிக்கைகள்

புதிய அரசியல் அமைப்பினால் நேர்ந்த அச்சுறுத்தல் ஒருபுறமிருக்க தமிழர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் அவர்களை அவலநிலைக்குத் தள்ளியுள்ளது. அத்தகைய சந்தர்ப்பங்கள் சிலவற்றை மட்டும் சொல்வதானால்:

1. இந்நாடு சுதந்திரமடைந்தபின், தேசிய சட்டங்களின் நடைமுறையினால் இந்நாட்டின் பொருளாதார வாழ்வுக்கு உயிர்நாடியான உழைப்பை உதவும் தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் அரசியல், சமூக பொருளாதார, தீண்டாச் சாதியினராக்கப்பட்டுள்ளார்கள். 1948 ம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின் மூலம் தோட்டங்களில் 10 லட்சம் தமிழர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டார்கள். அதன் விளைவாக இத் தமிழர்கள் வாக்குரிமையையும் இழந்தார்கள். அண்மைக் காலத்தில் தோட்டங்களில் பட்டினியாலும், வறுமையினாலும் பல மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

2. பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களில், அரசாங்க ஆதரவுடன் குடியேற்றத் திட்டங்களில் சிங்களவர்களைக் குடியேற்றி பாராளுமன்றத்தில் சிங்கள வாக்குரிமைப் பலத்தை அரசாங்கம் அதிகரித்திருக்கின்றது. அத்துடன்

தமிழ் மரபுவழித் தாயகத்தின் பூகோள அமைப்பை மாற்றும் சிங்கள அரசுகளின் வஞ்சகத் திட்டங்களுக்கு இது உதவுகின்றது.

3. இவ்வரசாங்கம் பதவிக்கு வந்த நாளிலிருந்து பல்கலைக் கழகம் புகவிரும்பும் தமிழ் மாணவருக்கு 'தரப்படுத்தல்' என்று வெளிப்படையாகக் கூறப்படும் ஒரு ஏமாற்றுத் தந்திரத்தின் மூலம் ஒரு பெரும் அநீதி இழைக்கப்பட்டிருக்கின்றது. திறமை புறக்கணிக்கப்பட்டுள்ளது. இன அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி வழங்கப் படுகின்றது. இதன்படி பல்கலைக்கழக அனுமதிக்கு ஒரு சிங்கள மாணவனிலும் பார்க்க தமிழ் மாணவனிடம் கூடுதலான தரம் எதிர்பார்க்கப்படுகின்றது. இத்திட்டத்தின் வெளிப்படையான நோக்கம் சிங்கள மாணவனுக்கு இடம் அளிப்பதும் தமிழ் மாணவனைத் தவிர்ப்பதுமாகும்.

4. காலத்துக்குக்காலம் தமிழ்மக்கள் பலாத்காரத்துக்கு இலக்காகியிருக்கிறார்கள். (உதாரணம்) 1958 ல் தென்னிலங்கைத் தமிழர்கள் கொலை, சித்திரவதை, கற்பழிப்பு, கொள்ளைகளாகிய மன்னிக்கமுடியாத வன்முறைகளுக்கு இலக்கானார்கள். இவற்றைச் செய்தவர்கள் இதற்கெனத் தயாராக்கப்பட்ட சிங்களக் காடையராகும். தமிழர்கள் தங்களுடைய நியாயமான குறைகளை எடுத்துக் கூற முற்படும் வேளைகளில் சிங்களப் பத்திரிகைகளும், அரசியல் வாதிகளும் 1958ம் ஆண்டின் இப்பயங்கரம் மீண்டும் நிகழலாம் என்று மிரட்டுவதுமுண்டு.

5. தமிழ்ப் பிரதேசங்களில் அற்ப காரணத்துக்காகப் பொலிசும், இராணுவமும் வெறியாட்டம் ஆடி, பயங்கரத்தையும், பலாத்காரத்தையும் கட்டவிழ்த்து விடுகின்றார்கள். உதாரணமாக 1974 ஜனவரியில் இலங்கையின் வட பகுதியிலுள்ள தமிழ்ப் பட்டணமான

யாழ்ப்பாணத்தில் அனைத்து உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின்போது காரணமற்ற பொலிஸ் நடவடிக்கை களினால் 9 தமிழர்கள் உயிரிழந்தார்கள்.

6. அரசாங்க சேவையிலும், அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழுள்ள நிறுவனங்களிலும் தமிழர்கள் உத்தியோகம் பெற அளிக்கப்பட்டுள்ள வாய்ப்புகள் மிகவும் குறைவு. அதுவும் இராணுவ, பொலிஸ் சேவைகளுக்குத் தெரிவு செய்யப்படும் வாய்ப்புகள் மிகமிகக் குறைவு. இதற்குக் காரணம் தமிழர்களின் பிரமாணிக்கம் "கேள்விக்கு" உரியதென்ற அரசாங்கத்தின் கருத்தாகும்.

7. தமிழர் கூட்டணிக்கு அனுதாபமான தமிழ் இளைஞர்கள் அடிக்கடி கைது செய்யப்பட்டு அற்பமான அல்லது ஆதாரமில்லாமல் உருவகிக்கப்பட்ட குற்றச்சாட்டு களின் பேரில் நீண்ட காலத்துக்குச் சிறையில் வைக் கப்பட்டிருக்கிறார்கள். அத்துடன் கொடுமையாகவும், மனிதத் தன்மையற்ற முறையிலும் நடாத்தப்படுகின்றார் கள். (இட வசதிக் குறைவினால் இத்தகைய நிகழ்வு களில் சிலவற்றை மட்டுமே குறிப்பிடுகிறேன்)

இலங்கையில் உள்ள தமிழ் இனத்தை எதிர்நோக்கி யிருக்கும் பிரச்சினையைப் பற்றிச் சுருக்கமாகக் கூற முயன் றுள்ளேன். மாநாட்டின் மத்தியில் உங்களுடைய அவசர வேலைகளுக்கிடையே உங்களை அதிக சிரமப்படுத்த விரும் பாமையினாற்றான் போதிய ஆவணங்களுடன் விரிவாக நான் இதனைச் சமர்ப்பிக்கவில்லை. தமிழ் மக்களின் மனதில் அலை மோதும் சில பிரச்சினைகளைத் தொட்டுக்காட்டியுள்ளதுடன் நாங்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துள்ள தீர்க்கமான முடிவையும் உங்களுக்குக் கூறியுள்ளேன். நானும் என்னு டைய நண்பர்களும் எமது பிரச்சினைகளை அறிய விருப் புடையோருடன் இந்த விஷயங்களைப்பற்றி மேலும் கலந் துரையாடுவதற்குத் தயாராயுள்ளோம்.

உங்கள் நிகழ்ச்சிநிரலின்படி உலகத்தில் காலனித்துவத்தை வேரோடு களைவதுபற்றி வாதிக்க விரும்புகின்றீர்கள். தமிழ்த் தேசிய இனம் அடிமையினமாக நடாத்தப்படுகின்றது என்பதையும், தமிழர்கள் இன ஒழிப்பு அச்சத்துக்கு இலக்காகியுள்ளார்களென்பதையும் தமிழ் மக்களின் சார்பில் நான் வற்புறுத்திக் கூறுகின்றேன். அடிமைப்பட்டிருக்கும் மக்கள் பற்றிய பொதுப் பிரச்சினைகளை நீங்கள் ஆராயும்போது குறிப்பிட்ட தமிழ்மக்களின் பிரச்சினைகள் பற்றியும் தகுந்த ஆலோசனை செய்யுமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

நன்றிகள் பல.


உங்கள் சேவையிலுள்ள,
சா. ஜே. வே. செல்வநாயகம், கியூ. சி.
தலைவர், தமிழர் கூட்டணி

16, அல்பிற கவுஸ் கார்டின்,
கொழும்பு - 3

## இவ்வறிக்கை ஒப்படைக்கப்பட்ட நாடுகள்

1. அல்பேனியா
2. எகிப்து
3. ஆஜென்ரீனு
4. அவுஸ்திரேலியா
5. ஆஸ்திரியா
6. பாறெயின்
7. வங்காளதேசம்
8. பெல்ஜியம்
9. பிரேசில்
10. பல்கேரியா
11. கமறூன்
12. கனடா
13. கொலம்பியா
14. கோஸ்ரசறீக்கா
15. செக்கோசிலோவேகியா
16. கொறியா மக்கள் - சனநாயகக் குடியரசு
17. டென்மார்க்
18. எதியோப்பியா
19. பின்லாந்து
20. பிரான்ஸ்
21. கபோன்
22. ஜேர்மன் ஜனநாயகக்-குடியரசு

23. ஜெர்மன் சமஷ்டிக்-குடியரசு
24. ஹங்கேரி
25. ஐஸ்லாந்து
26. இந்தியா
27. இந்தோனேசியா
28. ஈரான்
29. அயர்லாந்து
30. இஸ்ரேல்
31. இத்தாலி
32. ஐவறிகோஸ்ற்
33. ஜப்பான்
34. ஜோர்டன்
35. குவைற்
36. லாவோஸ்
37. லெபனன்
38. லைபீரியா
39. லக்ஸம்பேக்
40. மலாவி
41. மலேசியா
42. மோறிற்றேனியா
43. மெச்சிக்கோ
44. மொனக்கோ
45. மொங்கோலியா
46. நேபாளம்
47. நெதர்லாந்து (ஒல்லாந்து)
48. நியூசிலாந்து
49. நிக்சரகுவா
50. நோர்வே
51. பாக்கிஸ்தான்
52. பரகுவே
53. போலந்து
54. கொறியாக் குடியரசு
55. இலங்கை
56. வியட்நாம்
57. ஸய்ப்ரே
58. ருமேனியா
59. செனிகல்
60. சியராலியோன்
61. சிங்கப்பூர்
62. ஸ்பெயின் (ஸ்பானியா)
63. சுடான்
64. சுவீடன்
65. சுவிற்சலாந்து
66. சிரியா
67. தாய்லாந்து
68. துனிசியா
69. துருக்கி
70. ஐக்கிய இராச்சியம்
71. ஐக்கிய அமெரிக்கா
72. சோவியத் ருஷ்யா
73. வெனேசுலா
74. யுகோசிலாவியா





**1976 ஆவணியில் ஈழத்தில் நடைபெற்ற அணி சேரா நாடுகளின் ஐந்தாவது மாநாட்டிற்கு வருகை தந்த பேராளர்களுக்கு ஈழத்தமிழர் சார்பில் மூதறிஞர் தந்தை செல்வாவினால் ஒப்படைக்கப்பட்ட அறிக்கை.**



தமிழர் விடுதலைக் கூட்டணியின் இணைப் பொருளாளரும்
சிந்தனைச் சிற்பியுமான

உயர்திரு. சி. கதிரவேற்பிள்ளை பா. உ. கோப்பாய்
B. A. Hons Phil (Cey.) Advocate
அவர்களின் மதிப்புரை

ජාතික රාජ්‍ය සභාව
தேசிய அரசுப் பேரவை
National State Assembly



இன்று, ஈழத் தமிழருடைய விடுதலைப் பிரச்சினை உலகறிந்த விசயம். உலக மேடையில் நாம் செய்த பிரசாரம் பெரும்பாலும் ஆங்கிலத்தில் அமைந்துள்ளது. கொலனித்துவமும் அந்நிய ஆட்சியும் அந்நிய இறைமையும் முற்றாக நீங்கும்பொழுது ஈழத் தமிழர் இழந்த நாட்டையும், சுதந்திரத்தையும், அரசுரிமையையும் மீளப் பெறுகின்றனர்.

இதனைத் தடுத்து ஈழத் தமிழருடைய சுயநிர்ணய உரிமையை சிங்கள அரசு படைபலத்தால் நசுக்கு கிறது. 1976ஆம் ஆண்டு அணிசேரா நாடுகளுக்கு இலங்கையில் உள்ள நிலைமையைத் தெளிவாக்க இலண்டனில் இருந்து தந்தை செல்வ நாயகத்தின் பேரில் ஆங்கிலத்தில் ஓர் அறிக்கை கொழும்பில் நடந்த ஐந்தாவது மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு அனுப்பப்பட்டது. அதன் தமிழாக்கத்தை திரு. ச. பெ. வரதராசன் "அநீதிக்கு உலகம் ஆதரவா.......?" என்று இங்கே தந்துள்ளார். உலக மேடையில் எங்கள் பிரசாரம் எப்படி அமைகிறது என்று அறிவதற்கு இவருடைய மொழிபெயர்ப்பு தமிழ் மக்களுக்கு ஒரு வாய்ப்பைத் தந்திருக்கிறது. அவருடைய முயற்சியைப் பாராட்டி தமிழ் இனத்தின் சார்பில் அவருக்கு நன்றி சொல்லுகிறோம்.

இங்ஙனம்

[signature]

பா உ. கோப்பாய்.

68; குரூசெற் ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
9 - 4 - 1977

மதிப்பார்ந்த பேராளர்களே

எல்லாப் பிரதிநிதிகளுக்கும் வாழ்த்துக்கள், இலங்கையின் தமிழ்த் தேசிய இனத்தின் சார்பில் நாங்கள் உங்களை வரவேற்கின்றோம்.

படிப்படியாக மனித உரிமைகள் மறுக்கப்பட்டும், இனப்பாகுபாடு காட்டப்பட்டும், வேறு நடவடிக்கைகளினாலும், இறுதியில் இன ஒழிப்பு செய்யப்பட இருக்கும் இலங்கைத் தமிழர்களின் இன்றைய நிலை பற்றி உங்கள் மூலம் உலகத்தின் மனச்சாட்சியை விழிப்படையச் செய்யலாம் என்னும் நம்பிக்கையில், இந்த அறிக்கை உங்களுக்குச் சமர்ப்பிக்கப்படுகிறது.

அணிசேரா நாடுகள் குழு உருவாகத் தூண்டுதலாக இருந்த இலட்சியங்களும் கொள்கைகளும் 1961 இல் பெல்கிறேட்டிலும், 1964 இல் கெய்ரோவிலும், 1970 இல் லுசாக்காவிலும் அங்கீகரிக்கப்பட்டு பல பிரகடனங்களில் ஆணித்தரமாகவும், விரிவாகவும் வரையறுக்கப்பட்டுள்ளன.

இந்த எழுச்சியூட்டும் நோக்கங்களை சுருக்குகிறேன்:—

1. இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் மதிப்பளித்தல்
2. சமாதான சகவாழ்வும் ஆக்கிரமிப்பின்மையும்.
3. இனவாதத்துக்கு எதிர்ப்பு
4. ஏகாதிபத்தியத்திற்கு எதிர்ப்பு.
5. காலனித்துவத்திற்கு எதிர்ப்பு.

இனப்பாகுபாட்டையும், காலனித்துவத்தையும் ஒழித்துக் கட்டத் தங்களுடைய கூட்டுமுயற்சியைத் தீவிரப்படுத்துவதென இந்த நாடுகள் முடிவுசெய்தன. இந்த நோக்கத்திற்கு அமைய, தேசிய விடுதலை இயக்கங்களுக்கு தங்களுடைய தார்மீக அரசியல், பொருளாதார ஆதரவினை நல்குவதென உறுதியளித்தன.

அணிசேரா நாடுகளின் கொள்கைகளுக்கு தன் முழு உடன்பாட்டையும் இலங்கை அரசாங்கம் பிரகடனப்படுத்தியிருந்தபோதும், அதன் போதனைக்கும், சாதனைக்குமிடையில் முரண்பாடிருப்பது வேதனைக்குரியது.

> அணிசேராநாடுகள் தங்கள் இலட்சியங்கள், கொள்கைகளில் நிலைத்துநிற்க வேண்டுமெனில், தங்கள் மத்தியிலேயே நிலவும் ஏகாதிபத்தியவாதத்தையும் இனவாதத்தையும் கண்டிக்கவேண்டிய தருணம் வந்துவிட்டது. தென்னுபிரிக்காவில் இனவாதம் மேல் தோல்வரைதான் ஊடுருவி இருக்கின்றது. இலங்கையில் தமிழருக்கு எதிரான சிங்களவரின் இனவாதம் ஆன்மாவரை புரையோடியிருக்கிறது.

இலங்கைத் தமிழர்களுக்கான ஆதாரவாதம் —
(ஈழநாட்டுத் தமிழர்கள்)

சிங்கள தேசிய இனத்திலிருந்து, பிரதேசம், மொழி மதம், கலாச்சாரம் ஆகியவற்றினுல் முற்றிலும் வேறுபட்ட தேசிய இனம் இலங்கைத் தமிழர்கள் என்பது மறுக்க முடியாதது. (பின்னிணைப்பைப் பார்க்குக)

இலங்கையில் இரு அரசுகள் இருந்தன. என்று வரலாறு கூறுகின்றது. வடக்கே ஒரு தமிழ் அரசும், தெற்கே ஒரு சிங்கள அரசும் 1619 — 1815 காலத்தில் அடுத்தடுத்து போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களினுல் இவ் வரசுகள் கைப்பற்றப்பட்டன. ஐரோப்பியர்களாலும், இப் பிரதேசங்கள் ஒன்றிணைக்கப்படவில்லை, அவைகள் வெவ்வேறு பிரதேசங்களாகவே நிர்வகிக்கப் பட்டுவந்தன. 1833 இல் தான், ஆங்கிலேயர் நிர்வாக வசதிக்காக இவற்றை ஒன்றிணைத்தனர். 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தமிழர் சுதந்திரம், இறைமை ஆகியவற்றின் நீண்ட வரலாற்றை, சுமார் நூற்றுண்டுகாலத்துக்கு மட்டுமே நீடித்த காலனித்துவ வசதிக்காகச் செய்யப்பட்ட, இந்த ஏற்பாட்டை அழித்தெழுதமுடியாது.

தங்களுக்குச் சுதந்திரம் கிடைக்கும் என்ற முழு நம்பிக்கையிலேயே பிரிட்டிஷ் காலனித்துவத்திற்கு எதிராகவும், சுதந்திரத்திற்காகவும் நடைபெற்ற போராட்டத்தில் தமிழர்கள் முன்னணியில் நின்றார்கள். ஆனால் 1947 சுதந்திரத்திற்குப் பின்னர், ஐக்கிய இலங்கையில் சிங்களவர்களுடன் சமத்துவமான அடிப்படையில், தங்கள் அரசியல் உரிமைகளைப் பெற, தமிழர்கள் சகல முயற்சிகளையும் எடுத்தபோதும், அடுத்தடுத்து வந்த சிங்கள அரசுகள் சுதந்திரத்தின் மூலம் கிடைத்த அதிகாரத்தை, தமிழர்களுக்கு அடிப்படை உரிமைகளை மறுக்கவும் அவர்களை அடிமை மக்கள் என்ற நிலைக்குத் தாழ்த்தவுமே பயன்படுத்தியிருக்கின்றன என்பது வருத்தத்திற்குரியது.

ஒற்றையாட்சி அமைப்புடன் 1946இல் புகுத்தப்பட்ட சோல்பரி அரசியல்திட்டத்தோடு இரு பிரதான தேசிய இனங்களிடையே நேரடி மோதல் தொடங்கியது. ஆங்கிலேயருடன், இலங்கைக்குச் சுதந்திரம் வழங்குதல் பற்றிய பேச்சுவார்த்தைகள் நடாத்திய சிங்களத் தலைவர்கள் எல்லாப் பிரஜைகளையும்போல தமிழர்களும் அதே உரிமைகளை அனுபவிப்பார்கள் என்று அவர்களை நம்ப வைத்தனர். ஆகவே சுதந்திரம் வழங்கப்பட்டபோது ஆங்கிலேயர் (வரலாற்று உண்மைகளுக்கு முரணாக) தமிழர்களைச் சிறுபான்மை இனமாகக் கருதி, அரசியல் யாப்பில் பிரிவு 29 இல் பாதுகாப்புக்களை அளித்தார்கள். குறிப்பாக, ஓர் இனத்துக்கு அல்லது மதச் சமயத்திற்கு ஏதாவது கட்டுப்பாடுகளை அல்லது தகுதியின்மையைத் திணிக்கும் சட்டங்களையோ அல்லது மற்றச் சமூகத்தவருக்கு வழங்கப்படாத சலுகைகளையோ, நலன்களையோ ஒரு சமூகத்திற்கு அல்லது மதத்திற்கு வழங்கும் சட்டங்களையோ ஆக்குவது இதனால் தடுக்கப்பட்டிருந்தது.

ஆயினும், 1947 இல் சுதந்திரத்திற்குப் பின், நடைபெற்ற தேர்தலின் பின் முதலாவது சிங்கள அரசாங்கம் இந்திய வம்சாவழியினரான பத்து இலட்சம் தமிழர்களை

நாடற்றவர்களாக ஆக்கும் 1948 இன் 18 ஆம் இலக்க குடியுரிமைச் சட்டத்தை நிறைவேற்றியது. இதனால் அவர்களுடைய பிரயாண ஆவணங்கள், அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்கள், தொழில் முதலியன அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டன. அதன்பின்னர் அந்தச் சிங்கள அரசாங்கம் அதே பத்து இலட்சம் தமிழர்களின் வாக்குரிமையைப் பறிக்க தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்தது;

1946 இல் சோல்பரித் திட்டத்தில் பிரிவு 29 இல் வழங்கப்பட்ட அற்ப பாதுகாப்பைக்கூட 1972 இல் பிரகடனப்படுத்திய புதிய அரசியல் யாப்பு நீக்கிவிட்டது. அரசாங்க ஆதரவையும் பாதுகாப்பையும் அநுபவிக்கும் "முன்னணி" மதமாக பௌத்தத்தையும், ஒரே உத்தியோக மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும் சிங்களத்தையும் வலியுறுத்தியதன் மூலம் பெரும்பான்மையினரான சிங்கள இனத்தவரின் நிலை மேலும் பலப்படுத்தப்பட்டது.

இது மேலும் தமிழர்களுக்கு இடைஞ்சல்களை உண்டு பண்ணி ஒரு நெருக்கடியை உருவாக்கியது. இந்த நெருக்கடியில் வெவ்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்த தமிழர்கள் தங்கள் வேற்றுமைகளை மறந்து ஒரு கொடியின் கீழ் — தமிழர்கூட்டணியின் கீழ் அணிதிரண்டார்கள். இரு இனங்களும் ஒன்றாகவே இருப்பதற்குக் குறைந்தபட்சத் தேவையென சிங்கள அரசின் ஆலோசனைக்கு ஓர் ஆறு அம்சத் திட்டத்தைத் தமிழர்கூட்டணி சமர்ப்பித்தது.

அந்த ஆறு அம்சங்களாவன:

1. அரசியல் அமைப்பில் சிங்கள மொழிக்குரிய அதே அந்தஸ்து தமிழ்மொழிக்கும் வழங்கப்படல் வேண்டும்,

2. இந்த நாட்டைத் தமதாக்கிக் கொண்ட எல்லாத் தமிழ்பேசும் மக்களுக்கும் பூரண பிரஜா உரிமைக்கான உத்தரவாதம் அரசியல் அமைப்பில் இடம்பெற வேண்டும்.

3. அரசாங்கம் மதசார்பற்றதாய் இருக்க வேண்டும், எல்லா மதங்களுக்கும் சமமான பாதுகாப்பு அளித்தல் வேண்டும்.

4. அரசியல் அமைப்பு இன, கலாச்சார அடிப்படையில் எல்லா மக்களுக்கும் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் அடிப்படை உரிமைகளை அளித்தல் வேண்டும்.

5. தீண்டாமையையும் சாதியையும் ஒழிப்பதற்கு அரசியல் அமைப்பு ஏற்பாடு செய்ய வேண்டும்.

6. அரசாங்கத்தின் கைகளில் அதிகாரம் என்றில்லாமல் மக்களின் கைகளில் அதிகாரம் என்று இருந்தாற்றான் மக்கள், ஜனநாயகத்தில் பங்குகொள்வது சாத்தியம் ஆகும். அதற்கு ஜனநாயக, சமூக, சோசலிச சமூகத்தில் பன்முகப்படுத்தப்பட்ட அரசாங்க அமைப்பிலே தான் இது சாத்தியம் ஆகும்.

இக்கோரிக்கைகளைச் சிங்கள அரசாங்கம் பரிசீலிக்க மறுத்தது மாத்திரமல்ல, அரசாங்கத்துடன் இக்கோரிக்கை பற்றி பேச்சுவார்த்தை நடாத்த முன்வந்த தமிழ்த் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவும் மறுத்தது.

1972 இல் புதிய அரசியல் அமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்முகமாக இப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் இணைத் தலைவர்களுள் ஒருவரான திரு சா. ஜே. வே. செல்வநாயகம் கியூ. சி., பா. உ., தன்னுடைய நாடாளுமன்ற ஆசனத்தை ராஜினமாச் செய்தார். இடைத் தேர்தலை இரண்டு வருடங்களுக்கு மேலாகச் சிங்கள அரசாங்கம் பின்போட்டது. பின்னர் ஜனவரி 1975 இல் நடந்த இடைத்தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்ற திரு. செல்வநாயகம் தமிழ்மக்களுக்கு ஆற்றிய உரையில் கூறியதாவது:

"வழங்கப்பட்ட இறைமையை ஈழத்தமிழ்நாடு அனுபவிக்கவேண்டுமென்றும், சுதந்திரமாக வேண்டுமென்றும் தரப்பட்ட ஆணையென்று இத்தேர்தலத் தீர்ப்பை நான் கருதுகிறேன் என்பதை நாட்டுக்கும் என் மக்களுக்கும் அறிவிக்க விரும்புகின்றேன். இக்கட்டளையை நாங்கள் நிறைவேற்றுவோம் என்று பயபக்தியான உத்தரவாதத்தை விடுதலைக் கூட்டணி சார்பாக நான் அளிக்கின்றேன்."

இவ்விடைத்தேர்தல் ஒரு பொதுசன வாக்கெடுப்புக்குச் சமமானதாக — அதன் தன்மையைக் கொண்டு — கருதப்படுகின்றது. அதன் புதிய கொள்கையைப் பின்பற்றுவதற்கு விடுதலைக் கூட்டணிக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரம் சந்தேகத்திற்கு இடமில்லாதது. "கார்டியன்" பத்திரிகையின் தென்கிழக்கு ஆசிய நிருபர் திரு. வோல்டர் சுவார்ஸ் இவ்விடைத்தேர்தல் சம்பந்தப்பட்ட இரட்டைப் பிரச்சினைகளை நுணுக்கமாக ஆராய்ந்துள்ளார். (24-2-75-ல் வெளியான "கார்டியன்" பத்திரிகையில் "கிழக்கின் அயர்லாந்தில் திரிகள் தயார்" என்ற தலைப்பில் அரசியல் அமைப்புக்கு எதிராக என்னுடைய இராஜினாமாவைப் பற்றியும் "கூட்டணியின் புதிய பிரிவினைக் கொள்கையை அங்கீகரிப்பது என்று இலங்கை முழுவதும் கருதப்படும் இம்மாபெரும் இடைத் தேர்தல் வெற்றியைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்." இவ்வெழுத்தாளர் முடிவில் "தமது மக்களின் துவேஷ வெறியைக் கட்டுப்படுத்தக்கூடிய வலிமை பொருந்திய ஒரு சிங்களத் தலைவர் தோன்றாவிட்டால் தமிழர்களின் உள்ளக் குமுறல்கள் வன்முறையாக வெடிக்கத் தவறாது. சைப்பிரஸ் போன்ற அழகான இத்தீவு அதைப்போலவே இப்போராட்டத்தினால் சித்திரவதைக்குள்ளாகும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இடைத்தேர்தல் முடிவை ஆராய்ந்த 'இந்து' என்னும் தரமான இந்தியத் தினசரி 10-2-75-இல் "இலங்கையில் மோதல்" என்ற தலைப்பில் ஆசிரியத் தலையங்கம் தீட்டியுள்ளது; அதில் கூறப்பட்டுள்ளதாவது, "சிங்கள மக்களினால் வஞ்சிக்கப்படும் தமிழரின் உணர்ச்சியின் ஆழத்தை இவ்விடைத்தேர்தல் முடிவு நிச்சயமாக எடுத்துக்காட்டி

புள்ளது. சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து சிங்கள வகுப்பு வாதக் கோரிக்கைகளின்மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்ற சிங்கள அரசாங்கத்தினதும் அதன் தலைவர்களி னதும் குறுகிய நோக்கேயாகும். தேசிய அரசுப் பேரவையி லிருந்த பெரும்பான்மை சிங்கள வாக்குகளைப் பயன்படுத்தி தமிழர்களை வஞ்சிக்கப் புகுத்தப்பட்ட புதிய அரசியல் அமைப்பு தமிழர்கள் தங்கள் மத்தியிலிருந்த வேற்றுமை களை மறந்து சிங்களக் கூட்டரசாங்கத்துக்கு எதிராக அணி திரண்டு திடமாக மோதுவதற்கு இடமளித்திருக்கிறது''

சுருக்கமாகச் சொன்னால், இலங்கையின் இரண்டு இறைமை உரித்துடைய இனங்களையும் ''ஒரே இனமாக'' காலனித்துவ ஆட்சியாளர் இணைத்தது செயற்கையான தாகும். இதன்மூலம் தமிழர்களோ, சிங்களவர்களோ உண்மையான சுதந்திரத்தைப் பெறவில்லை. தமிழர்களின் கோரிக்கை, தாங்கள் மீண்டும் 1833 இல் பிரித்தானிய ஆட்சிக்கு முன் இருந்த அந்தஸ்தைப் பெறவேண்டும் என் பதும், சுதந்திர இறைமையுடைய மதச்சார்பற்ற சோசலிஷ அரசாக வேண்டும் என்பதுமாம்;

## தமிழர்களுக்கு எதிராக சிங்கள இனவாத நடவடிக்கைகள்:

புதிய அரசியல் அமைப்பினால் நேர்ந்த அச்சுறுத்தல் ஒருபுறமிருக்க, தமிழர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட பல வேறு நடவடிக்கைகள் அவர்களை அவலநிலைக்குத் தள்ளி யுள்ளது. அத்தகைய சந்தர்ப்பங்கள் சிலவற்றை மட்டுக் சொல்வதானால் :

1. இந்நாடு சுதந்திரமடைந்தபின், தேசிய சட்டங்களின் நடைமுறையினால் இந்நாட்டில் பொருளாதார வாழ் வுக்கு உயிர்நாடியான உழைப்பை உதவும் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் அரசியல், சமூக, பொருளாதாரதீண்டாச் சாதியினராக்கப்பட்டிருக்கிறார் கள். 1948 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின்

மூலம் தோட்டங்களில் 10 இலட்சம் தமிழர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டார்கள். அதன் விளைவாக அத்தமிழர்கள் வாக்குரிமையையும் இழந்தார்கள். அண்மைக் காலத்தில் தோட்டங்களில் பட்டினியாலும், வறுமையினாலும் பல மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

2. பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களில் அரசாங்க ஆதரவுடன் குடியேற்றத்திட்டங்களில் சிங்களவரைக் குடியேற்றி பாராளுமன்றத்தில் தங்கள் வாக்குரிமைப் பலத்தை அரசாங்கம் அதிகரித்திருக்கின்றது. அத்துடன் தமிழ்மரபுவழித் தாயகத்தின் பூகோள அமைப்பை மாற்றும் சிங்கள அரசுகளின் வஞ்சகததிட்டங்களுக்கு இது உதவுகின்றது.

3. இவ்வரசாங்கம் பதவிக்கு வந்த நாளிலிருந்து பல்கலைக் கழகம் புகவிரும்பும் தமிழ் மாணவருக்கு 'தரப்படுத்தல்' என்று வெளிப்படையாகக் கூறப்படும் ஓர் ஏமாற்றுத் தந்திரத்தின் மூலம் ஒரு பெரும் அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. திறமை புறக்கணிக்கப்பட்டுள்ளது; இன அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படுகின்றது. இதன்படி பல்கலைக்கழக அனுமதிக்கு ஒரு சிங்கள மாணவனிலும் பார்க்கத் தமிழ் மாணவனிடம் கூடுதலான தரம் எதிர்பார்க்கப்படுகின்றது. இத்திட்டத்தின் வெளிப்படையான நோக்கம், சிங்கள மாணவனுக்கு இடமளிப்பதும், தமிழ்மாணவனைத் தவிர்ப்பதும் ஆகும்;

4; காலத்திற்குக்காலம் தமிழ்மக்கள் பலாத்காரத்திற்கு இலக்காகி இருக்கிறார்கள். (உதாரணம்) 1958 தென்னிலங்கைத் தமிழர்கள் கொலை, சித்திரவதை, கற்பழிப்பு, கொள்ளைகள் ஆகிய மன்னிக்கமுடியாத வன்முறைகளுக்கு இலக்கானார்கள். இவற்றைச் செய்தவர்கள் இதற்கெனத் தயாராக்கப்பட்ட சிங்களக் காடையராகும். தமிழர்கள் தங்கள் நியாயமான குறைகளை எடுத்துக் கூற முற்படும் வேளைகளில் சிங்களப்பத்திரிகைகளும், அரசியல்வாதிகளும் 1958 ஆம் ஆண்டின் இப் பயங்கரம் மீண்டும் நிகழலாம் என்று மிரட்டுவதுண்டு.

5. தமிழ்பிரதேசங்களில் அற்ப காரணத்திற்காகப் பொலிசும், இராணுவமும் வெறியாட்டம் ஆடி பயங்கரத்தையும் பலாத்காரத்தையும் கட்டவிழ்த்துவிடுகின்றனர் கள் உதாரணமாக, 1974 ஜனவரியில் (இலங்கையில் வட பகுதியில் உள்ள தமிழ்ப்பட்டினமான) யாழ்ப்பாணத்தில் அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாட்டின் போது காரணமற்ற பொலிஸ் நடவடிக்கைகளினுல் 9 தமிழர்கள் உயிரிழந்தார்கள்.

6. அரசாங்க சேவையிலும் அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழுள்ள நிறுவனங்களிலும் தமிழர்கள் உத்தியோகம் பெற அளிக்கப்பட்டுள்ள வாய்ப்புகள் மிகவும் குறைவு. அதுவும் இரணுவ, பொலிஸ் சேவைகளுக்குத் தெரிவு செய்யப்படுவது மிகமிகக் குறைவு. இதற்குக் காரணம் தமிழர்களின் பிரமாணிக்கம் "கேள்விக்கு" உரியதென்ற அரசாங்கத்தின் கருத்தாகும்.

7. தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அனுதாபமான தமிழ் இளைஞர்கள் அடிக்கடி கைதுசெய்யப்பட்டு அற்பமான அல்லது ஆதாரமில்லாமல் உருவாக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின்பேரில் நீண்ட காலத்திற்குச் சிறையில் வைக்கப்பட்டிருக்கிறுர்கள். அத்துடன் கொடுமையாகவும், மனிதத்தன்மையற்ற முறையிலும் நடத்தப்படுகிறுர்கள்.

8. 1976 இல் பொலிஸ் பலாத்காரத்திற்குப் பயந்து ஒரு மசூதியில் அடைக்கலம் புகுந்த நிரபராதிகளான ஏழு தமிழ்பேசும் முஸ்லிம்கள் சிங்களப் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

9. தனிநாடு உரிமைகோரி துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்ததற்காக மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணி இணைச் செயலாளரும், 1976 மே 22 இல் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் சொத்து பறிமுதலும், 20 வருட சிறைவாசமும் தண்டனையாக விதிக்கப்படக்கூடிய சிங்கள அவசர காலச் சட்டத்தின்கீழ் தேசத்துரோக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்கள்.

(இடவசதிக் குறைவினால் இத்தகைய சந்தர்ப்பங்களில் சிலவற்றை மட்டுமே குறிப்பிடுகிறோம்)

கௌரவப் பிரதிநிதிகள் அவர்களே,

உலகத்தில் காலனித்துவத்தையும், இனவாதத்தையும் முற்றாக ஒழிப்பது பற்றி உங்கள் நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றிருக்கிறது. இன ஒழிப்பு அச்சத்தை எதிர்நோக்கியுள்ள தமிழினம் அடிமைமக்களாக நடாத்தப்படுகின்றார்கள் என்பதை ஈழத் தமிழர்கள் சார்பில் வற்புறுத்திக் கூறுகின்றோம். அடிமை மக்கள் என்ற பொதுப்பிரச்சினை பற்றி ஆராயும் போது ஈழத் தமிழர்களின் குறிப்பான பிரச்சினைகளுக்கு உரிய இடமளிக்கவேண்டுமெனக் கோருகிறோம்.


இறுதியாக, முன்னர் குறிப்பிட்டதுபோல தமிழர் பிரச்சினை ஓர் உள்நாட்டு விவகாரம் அல்ல, இந்தியாவின் முதலாவது மகாதேசாதிபதியாகவிருந்த காலஞ்சென்ற ஸ்ரீ இராஜகோபாலாச்சாரி அவர்களின் கூற்றிலிருந்து தீர்க்கமான ஒருபகுதியை இதுதொடர்பாக குறிப்பிட விரும்புகிறோம். ''அந்தரங்க அநீதிகள் வீட்டுச்சுவர்களுக்குள்ளே இடம்பெறுகின்றன. பகிரங்க அநீதிகள் நாடுகளின் எல்லைக்குள்ளே இடம்பெறுகின்றன. நாட்டின் எல்லைகள் பரிசுத்தமானவை என்று உலக அபிப்பிராயம் கருதுமேயானால் முழுமையாக உலகம் முன்னேறுவதற்குச் சந்தர்ப்பமே இருக்காது — கொடுங்கோன்மை உலக அங்கீகாரத்தைப் பெற்றுவிடும்''

உங்களுக்கு என் நன்றி உரித்தாகுக!

சா. ஜே. வே. செல்வநாயகம் கியூ. சி. பா. உ.
இணைத் தலைவர்,
தமிழர் விடுதலைக் கூட்டணி
இலங்கை

16, அல்பிறட் ஹவுஸ் ஹாசிடின்,
கொழும்பு - 3,
இலங்கை.

ஈழத்தமிழர் கழகம். லண்டனிலிருந்து அணிசேரா மாநாட்டுக்கு வருகைதந்த வெளிநாட்டுத் தலைவர்களுக்கும். பேராளர்களுக்கும் அனுப்பியுள்ள தந்தை செல்வாவின் அறிக்கையின் முன்பக்கத் தோற்றம் இதுவாகும்.




கும்புக்கன் ஆறுமுதல் மகா ஆறுவரையான தமிழ் ஈழத்தின் பகுதியே வடக்கு, வடமேற்கு, கிழக்கு ஆகியவற்றை உள்ளடக்கிய நிலப்பரப்பாகும்.

பிற்சேர்க்கை

## டி குயறோஸ்

1687 இல் பேர்ஞ டி குயறோஸ் எழுதிய "உலக ஆன்மீக துறையில் இலங்கையில் வெற்றி" என்ற நூல் "மகாவம்சத்துக்கு அடுத்தது" என்று வர்ணிக்கப்படுகின்றது. இலங்கைத் தமிழரசு பற்றி இதில் (புத்தகம் 1. பக்கம் 51) கூறப்பட்டிருப்பதாவது: "இந்த அடக்கமான அரசு சிறிய யாழ்ப்பாண மாவட்டத்துக்குள் மட்டும் கட்டுப்படுத்தப்பட்டதல்ல. ஏனெனில் நாங்கள் கைப்பற்றமுன் ஆட்சிபுரிந்த பிரபுவின் பெயரைக்கொண்ட வன்னிப்பிரதேசமும் ஓர் உப்பு ஆற்றினால் பிரிக்கப்பட்டதும் ஒரு முனையில் பச்சிலைப் பள்ளி பூசந்தியால் தொடங்கப்பட்டதும் அயல் நிலப்பரப்புக்களையும் சேர்ந்ததாகும். இக்குடாநாடு வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, பச்சிலைப்பள்ளி) ஆகியவற்றைக் கொண்டது. இதற்கப்பால் வன்னிக்குக் குறுக்காக மன்னாரிலிருந்து திருக்கோணமலை வரை மன்னார் தலைவரின் அதிகாரத்திலுள்ள மாந்தோட்டையிலிருந்து பெருங்கழி நதியால் பிரிக்கப்பட்ட (நிலப்) பரப்புமாகும்? இது வன்னியில் சிலுவை நதியில் முடிவடைகின்றது. திருக்கோணமலை வரை நீண்டுகிடக்கும் வேறுபல நிலப்பரப்புகள் படத்தின்படி பரந்ததாகக் காணப்படுகின்றது."

## பவில்ஜியன்

யாழ்ப்பாணத்தின் ஒல்லாந்த இராணுவ அதிகாரி பவில்ஜியன் தன் படைகளின் அதிகாரத்திற்குக் கீழ் இருந்த பிரதேசத்தை 1665 இல் தன்னுடைய ஞாபகக்குறிப்பில் வர்ணிக்கும்போது "வடகிழக்கிலிருந்து தென்மேற்குவரை என்றும் திருக்கோணமலையில் இருந்து (இடையேயுள்ள வன்னி மாகாணம் உட்பட) கல்பென்ரின் வரை என்றும், அத்துடன் யாழ்ப்பாண மாகாணத்தைச் சுற்றியுள்ள தீவுகளும், மன்னார் தீவும் உட்பட கடலுக்குள்ளே நீண்டுகிடக்கும் பகுதிகளும் என்றும், எல்லாமாகச் சேர்ந்து கீர்த்திபெற்ற சிறந்த இவ்விலங்கைத் தீவின் பெரும்பகுதி என்றும் கூறுகிறார்." (ஒல்லாந்த அறிவிப்புக்கள் 1908. பக்கம் 105.).

## பேர்கசன்

இலங்கையின் பரந்த தமிழ்ப் பிரதேசங்கள் பற்றிய பல குறிப்புகள் "இலங்கைக்கு ஒல்லாந்தரின் ஆதிகால வருகைகள்" பற்றிய டோனல்ட் பேர்கசனின் வர்ணனையில் காணப்படுகின்றன.

## வான் குவன்ஸ்

அக்டோபர் 1675 இல் ஒல்லாந்த தேசாதிபதி வான் குவன்ஸ் எழுதியதாவது, "மட்டக்களப்பு வாசிகள் (பழக்க வழக்கம், மதம், வம்சாவழி இதர குணாதிசயங்கள் உட்பட) யாழ்ப்பாண வாசிகள், கொட்டியார் வாசிகள், மேற்குப் புறத்தில் கல்பென்டீன், வடபகுதியில் மங்குல் கோரல் அடங்கிய பகுதியில் உள்ளவர்கள் அநாதிகாலத்திலிருந்து இன்றும் மலையாளிகள்..." (ஜேசிபிஆர்ஏஎஸ் தொகுதி 31, இல. 82, 1929. பக். 368) அதே அறிக்கையில் வன் குவன்ஸ் மேலும் தன்னுடைய வர்ணனையில் விரிவுபடுத்தி "மலையாள ராஜாக்களின் பிரதேசம்" எனக் குறிப்பிட்டு தமிழ்நாட்டின் பரந்த எல்லைகள் கிழக்கிலிருந்து மேற்குவரை மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து "மேற்கோர கடற்கரையில் நீர்கொழும்புவரை நீண்டிருந்தது" (பக்கங்கள் 376, 377).

## வான் இம்கொவ்

1740 இல் ஒல்லாந்த தேசாதிபதி பாரன் வான் இம்கொவ் தன்னுடைய ஞாபகக் குறிப்புக்களில் தன்னுடைய பட்டாளத்தின் கீழிலிருந்த "செய்மலிலிருந்து வளவை வரை" உள்ள நிலப்பரப்பு "சிங்களப் பிரதேசம் எனவும், அதனோடு ஒப்பிடுகையில் யாழ்ப்பாணம் முன்னர் தனி அரசாக இருந்து, இப்பொழுது மன்னார் அதிபதியின்கீழுள்ள மூன்று மாகாணங்களும் மாந்தோட்டை, நானாட்டான், மோஸலிவி ஆகியவையும் அதன் மேற்கெல்லை வரையுள்ள பிரதேசமும் மன்னாரிலிருந்து வடக்கே யாழ்ப்பாணம்வரை பத்து அல்லது பன்னிரண்டு மைல்வரை வேறு இனத்தவர்

கள் வசித்ததினுல் அங்கு அரசியல் லௌகிக கருமங்கள் தொடர்பாக வேறுமுறையில் ஆட்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது'' (ஒல்லாந்தரின் ஞாபகக்குறிப்பு 1911, பக்கங்கள் 30, 31)

## அன்ரனி மூயாட்

1766 இல் யாழ்ப்பாணத் தளபதி அன்ரனி மூயாட் ஒல்லாந்த அதிகாரத்திலிருந்த யாழ்ப்பாணப் பகுதியை பரந்த பிரதேசம் எனவும் ''இலங்கைத் தீவில் மூன்றில் ஒரு பகுதி'' எனவும், ''மொழி, பழக்கவழக்கம், ஆட்சிமுறை ஆகியவற்றில் கண்டி வாசிகளிலிருந்து வேறுபட்டவர்கள்'' எனவும் குறிப்பிட்டுள்ளார் (ஒல்லாந்த ஞாபகக் குறிப்பு 1910, பக் 8). யாழ்ப்பாணத் தளபதியின் ஆதிக்கத்தின் கீழ் மன்னூர் இருந்தது. 1919 இல் தேச வழமை ஆணையாளரின் அறிக்கை ''ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணம், மன்னூர், முல்லைத்தீவு மாவட்டங்களையும் உள்ளடக்கியிருந்தது என்று கூறப்பட்டுள்ளது.''

அன்ரனிஸ் எழுதிய ''இலங்கையில் ஒல்லாந்தர்'' என்ற நூலில் மன்னூர், திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகியவை யாழ்ப்பாண ஆட்சியின் கீழ் இருந்த சிறு நிலையங்கள் என்பதை ஊர்ஜிதப்படுத்தியுள்ளார். (பக். 184) அருட்திரு எஸ். ஜீ. பெரேரா ''இலங்கை வரலாற்றிலும்'' கலாநிதி போல் பீரிஸ் ''போர்த்துக்கேய சகாப்தத்திலும்'' இதனை ஊர்ஜிதப்படுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாண அரசு போர்த்துக்கேய ஆயுத பலத்தினுல் அடிமைப்படுத்தப்பட்டது. கண்டி அரசின் ஆணையின் மீதோ அல்லது கண்டி மன்னனின் முடியில் ஒரு மணியாகவோ போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றவில்லை. விலைமதிக்க முடியாத உடமையாக ஒல்லாந்தர் அடிமைப்படுத்தும் வரை போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைத் தங்களுடையதாகவே வைத்திருந்தனர். பின்னர்

ஒல்லாந்தர் ஆங்கிலேயருக்கு இடம்விட்டுக் கொடுத்தனர். 1766 இல் சமாதான உடன்படிக்கையில் கண்டி மன்னனின் பிரதேசம் வரையறுக்கப்பட்டிருந்தது. முழுக்கமுழுக்க தமிழ்ப்பிரதேசம் என ஏகோபித்த சம்மதத்துடன் அங்கிகரிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்கள் இப்பிரதேசத்தில் அடங்கவில்லை. 1794 இல் வரையப்பட்ட பேனட் அக்டன்ரேவ் அவர்களின் இலங்கைப்படம் 1766 ஆம் ஆண்டு உடன்படிக்கையின்படி உள்ள இந்த எல்லைகளைக் குறிக்கின்றது. இப்படத்தினுடைய ஒல்லாந்த "குறிப்புகள்" புரூகியர் குறிப்பிடும் "சிலாபம் நதிக்கும் கும்புக்கன் ஆறுக்கும் இடையேயுள்ள வடக்கு கிழக்குப் பகுதிகளில் மலையாளிகள் வசித்தார்கள்" எனவும், இதுவே "ஒல்லாந்தர் காலத்தில் வெளியிடப்பட்ட கடைசி இலங்கையின் புவியியல் படம்" எனவும், (தொகுதி 2, பக்கம் 53) இலங்கையின் கடலோர மாவட்டங்கள் 1796 இல் ஒல்லாந்தரிடம் இருந்து ஆங்கிலேயர் கைப்பற்றிய பிரதேசம் எனவும் (ஜேசிபிஆர் ஏஎஸ் தொகுதி 38 இல. 107. 1949 பக். 133) 1815 இல் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்ட கண்டி அரசிடமிருந்து வேறுபட்டதெனவும் கூறுகின்றது.

## கிளகோன்

ஆங்கிலேய சக்கராதிபத்தியத்திற்கு இலங்கை இணைக்கப்படுவதற்குக் காரணகர்த்தாவாயிருந்த கியு கிளகோன் 1-6-1799 திகதியிடப்பட்ட "பிரசித்திபெற்ற கிளகோன் குறிப்பில்" இலங்கையில் ஒல்லாந்தர் நிர்வாகம் பற்றிக் கூறுவதாவது "புராதன காலத்திலிருந்து இத்தீவின் உடைமையை இரு வெவ்வேறு இனங்கள் பங்குபோட்டுக் கொண்டன. முதலாவதாகத் தெற்கிலும், மேற்கிலும் வளவை நதியிலிருந்து சிலாபம் வரை உள்நாட்டில் வாசம் செய்த சிங்களவர். இரண்டாவதாக வடக்கு கிழக்குக்குச் சொந்தமான மலையாளிகள்" "மலையாளிகள்" என்பது தமிழர்களை என்ற ஒரே கருத்தில் உள்ளது. (இக்குறிப்பு ரால்வ் பீரீஸ் என்பவரால் றோயல் ஏசியாற்றிச் சங்கம் இலங்கைக் கிளையின் சஞ்சிகையில் 1954 தொகுதி 3, பாகம் 2 பக் 131இல் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது.)

## பிறவுன்றிக்

10-7-1813 இல் இலங்கை மகாதேசாதிபதி சேர் றொபட் பிறவுன்றிக் குடியேற்ற நாடுகளின் செயலாளரான பத்தேஸ்ட் பிரபுக்கு கொழும்பு அரசமாளிகையிலிருந்து அனுப்பிய குறிப்பில் இலங்கை அரச சேவைகளுக்காக தேசாதிபதி மெயிற்லண்ட் வகுத்த சில விதிகளைப்பற்றியும் குறிப்பிட்டு, மொழி சம்பந்தமாக பின்வருமாறு கூறியுள்ளார்.

"தேசிய மொழி அறிவு தராதரத் தேவை பற்றி சிங்களமும் போர்த்துக்கேய மொழியும் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. தெற்கே சிங்களம் போல வட மாவட்டத்தில் முழுமையாகத் தேவைப்படும் ஒரு மொழி தவிர்க்கப்பட்டுள்ளது. போர்த்துக்கேய மொழி கலப்புடன் மலையாள மொழியென பொதுவாகக் கூறிப்பிடப்படும் தமிழ் மொழியையே நான் குறிப்பிடுகின்றேன். புத்தளம், மட்டக்களப்பு உட்பட அவற்றிற்கு வடக்கே எல்லா மாவட்டங்களிலும் உள்ள வாசிகளின் சுதேச மொழியாகும். ஆகவே சிங்களத்துடன் தமிழுக்கும் சம அந்தஸ்து நாம் அளிப்பதற்கு பிரபு அவர்கள் மறுப்புத் தெரிவிக்கமாட்டீர்கள் என எதிர்பார்க்கிறேன்."

## ரெனன்ற்

1859 இல் பிரசுரமான "இலங்கை" என்ற நூலில் எமசன் ரெனன்ற் கூறுவதாவது, "...... மேற்கு கடலோரத்தில் சிலாபத்திலிருந்தும் கிழக்குக் கடலோரத்தில் மட்டக்களப்பிலிருந்தும் இத்தீவின் வடபகுதியில் பெரும்பான்மையான இடங்களிலும் முக்கியமாக இத்தீவின் மொழி முழுக்க முழுக்க தமிழாகும்."

## இவ்வறிக்கை ஒப்படைக்கப்பட்ட நாடுகளாவன:
## (1976)

1. அப்பகானிஸ்தான்
2. அல்ஜீரியா
3. அங்கோலா
4. ஆஜென்ரீனு
5. பாஉற்றெயின்
6. வங்காள தேசம்
7. பெலிஸ்
8. பூட்டான்
9. பெரிற்ஸ்வானு
10. பர்மா
11. புறுண்டி
12. கம்பூச்சியா (கம்போடியா)
13. கமறூன் குடியரசு
14. வேடிமுனைதீவுகள்
15. மத்திய ஆபிரிக்க குடியரசு
16. சாட்
17. கொமோரோதீவுகள்
18. கொங்கோ குடியரசு
19. கியூபா
20. சைபிறஸ்
21. தஹோமே
22. எகிப்து ஐக்கிய அராபிய குடியரசு)
23. மத்தியகோட்டுக்கினி
24. எதியோப்பியா (அபிசீனியா)
25. கபோன்
26. காம்பியா
27. கானு
28. கினி
29. கினி - பிசோ
30. குயானு
31. இந்தியா
32. இந்தோனேசியா
33. ஈராக்
34. ஐவறிக்கோஸ்ற் (தந்தக் கரை)
35. ஜமெக்கா
36. ஜோர்டன்
37. கெனியா
38. கோரிய மக்கள் குடியரசு
39. குவைற்
40. லாவோஸ்
41. லெபனன்
42. லெசோத்தோ
43. லைபிரியா
44. லீபியா அராபிய குடியரசு
45. மலகாசி குடியரசு (மடகஸ்கார்)
46. மலேசியா
47. மாலி
48. மோல்ற்ரு
49. மோறீற்றேனியா
50. மொரீஷஸ்
51. மொரொக்கோ
52. மொசாம்பிக்
53. நேபாளம்
54. நைகர்
55. நைஜீரியா
56. ஓமான்
57. பலஸ்தின விடுதலை இயக்கம்
58. பனுமா

59. பேரு
60. குவாட்டர்
61. ருவாண்டா
62. சவுதி அராபியா
63. செயிஷெல்ஸ்
64. செனிகல்
65. சியராலியோன்
66. சிங்கப்பூர்
67. சோமாலியா
68. இலங்கை
69. சூடான்
70. சுவாசிலாந்து
71. சிரிய அராபிய குடியரசு
72. தோகோலாந்து
73. திறினிதாத்தும் தொபாகோவும்
74. தூனீஸியா
75. உகாண்டா
76. ஐக்கிய அராபிய எமிரேட்ஸ்
77. தான்ஸானியா குடியரசு
78. மேல்வோல்ற்று
79. வியட்னும் சோசலிச குடியரசு
80. யேமன் அராபிய குடியரசு
81. யேமன் மக்கள் ஜனநாயக குடியரசு
82. யுகோஸிலாவியா
83. ஷய்ரே (பெல்ஜியன் கொங்கோ)
84. ஸாம்பியா

திரு ______________________ அவர்கட்கு

தமிழீழ விடுதலைக்கான
எனது இச் சிறுபணிக்கு
தங்களின் பங்களிப்பு
மிகமிகப் பெரிது.
சுதந்திர தமிழீழத்தின்
எதிர்காலச் சிற்பிகள்
தங்களை நன்றியுடன்
நினைத்துக் கொள்வார்கள்...

என் அன்பு உங்களதே...
அன்பன்
திருமலை. வரதராசன்

# இது சிங்கள சோசலிசமா ? அல்லது வகுப்புவாதமா?

o பாராளுமன்றத்தில் தமிழ் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் வகையில் தமிழ்மக்களின் அரைவாசிப்பேரின் குடியுரிமை யையும், வாக்குரிமையையும் பறித்தமை;

o அரசாங்க ஆதரவுடன் திட்டமிட்ட குடியேற்றத்திட்டங்களின் மூலமும், சிங்கள கள்ளக் குடியேற்றங்களை சட்டபூர்வமாக் கியதன் மூலமும் தமிழ் அரசுக்குச் சொந்தமான பிரதேசங் களில் ஊடுருவல் செய்தமை.

o இலங்கை முழுமையும் பூரணமற்ற ஒரு மொழியை ஒரே உத்தியோகமொழியாக்கி, பழமையான வளமான தமிழ் மொழியையும் தமிழர்களையும் தாழ்வுநிலைக்குத் தள்ளியமை.

o பொதுவாக பொருளாதார வாழ்விலும் காணிப்பங்கீட்டிலும் உத்தியோகவாய்ப்பிலும், கல்வியிலும் தமிழர்க்குச் சமசந் தர்ப்பத்தை மறுத்தமை.

o இலங்கையில் தங்களுடைய மொழியையும் கலாச்சாரத்தை யும் அபிவிருத்திசெய்யும் சந்தர்ப்பங்களை தமிழர்களுக்கு மறுத்ததுடன் அவர்களது கலாச்சார ஊற்றுன தென் இந்தியக் கலாச்சார போக்கிலிருந்து படிப்படியாக துண் டாடியமை.

o தமிழ்மக்களுக்கு எதிராக இனரீதியிலும் மதரீதியிலும் வன் முறையை அனுமதித்ததும் கட்டவிழ்த்துவிட்டதும் 1956 இல் கொழும்பிலும், அம்பாறையிலும், 1958 இல் நாடுமுழுவதி லும் 1961 இல் தமிழ்ப்பிரதேசங்களில் பயங்கர இராணுவ

ஆட்சியும் 1974 இல் யாழ்ப்பாண தமிழ் மகாநாட்டில் பொலி சார் தமிழரைக் கொன்றதும், எல்லாவற்றிற்கும் சிகரமாக 1976 இல் வழிபாட்டிடமான மசூதியில் இருந்த ஏழு அப்பாவிகளான தமிழ் முஸ்லீம்களைச் சுட்டுக்கொன்றதும்,

o அற்ப காரணங்களுக்காக தமிழ்இளைஞர்களை அச்சுறுத்தியும், சித்திரவதை செய்தும் நீண்டகாலத்துக்கு சிறையில் அடைத்தமையும்.

o சுதந்திரமாக விவாதிக்க சந்தர்ப்பம் அளிக்காமல் அவசர கால நிலையின் கீழ் ஒரு புதிய அரசியல் யாப்பை வகுத்து தமிழ் இனத்தின் மீது திணித்தமை.

o தமிழர்கள் தாங்கள் அடிமைப்படுத்தப்பட்டிருப்பது பற்றியோ தங்கள் துன்பங்களை பற்றியோ அல்லது அரசியல் யாப்புக்கு எதிராகவோ கருத்துத் தெரிவிக்கும் பேச்சு, எழுத்து சுதந்திரத்தை மறுத்தமை.

Dr. C. S. NACHINARKINIAN
LECTURER
DEPARTMENT OF COMMUNITY MEDICINE
UNIVERSITY OF JAFFNA

UNIVERSITY OF JAFFNA * LIBRARY *

••oO○Oo••

ARCHIVES

---

*இந்நூல் கோப்பாய் பா. உ. சி. கதிரவேற்பிள்ளை அவர்களின் அங்கீகாரத்துடன், 194 ஏ பண்டாரநாயக்கா வீதியில் வதியும் திருக்கோணமலை வரதராசனால் 450, காங்கேசன் துறைவீதியிலுள்ள சைவப்பிரகாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இலங்கைத்தீவில் தமிழ்ஈழம்




## விளக்கம்


- தமிழ் ஈழ எல்லைக்கோடு
- தேவத்தலங்கள்
- குளங்கள் (இடங்கள், பண்டைய பெயர்கள்)
- ஸ்ரீ லங்கா அரசு இரகசியத் திட்டங்கள் மூலம் சிங்கள குடியேற்றத்தை தமிழ் ஈழ எல்லைப்பரப்புகளில் நடத்தியதால், தமிழ் ஈழம் இழந்த பிரதேசங்கள்.




கும்புக்கன் ஓயாவிலிருந்து பட்டிப்பளை

ஆறு, மாவலி கங்கை, கந்தளாய், யான் ஓயா

UNIVERSITY OF JAFFNA ★ LIBRARY ★
ARCHIVES




கும்புக்கன் ஓயாவிலிருந்து பட்டிப்பளை ஆறு, மாவலி கங்கை, கந்தளாய், யான் ஓயா, அருவி ஆறு, முகத்துவார ஆறு, கால ஓயா ஆகிய ஆற்றங்கரையோரமாக வரும் தமிழ் ஈழ எல்லைக்கோடு புத்தளம் மாவட்ட எல்லைக் கோட்டுடன் தொடர்ந்து மகா ஓயா ஆற்றின் கரையோரமாகச் சென்று நிறைவுறுகின்றது. இந்நிலப்பகுதியே ஈழத்தமிழரின் ஆள்புலம் - தமிழ் ஈழநாடு. அங்கே அமைவதே தமிழ் ஈழ அரசு.

அளவு : 24 மைலுக்கு ஓர் அங்குலம்



UNIVERSITY OF JAFFNA ★ LIBRARY ★
ARCHIVES

“ஆண்ட தமிழினம்
மீண்டும்
தமிழீழத்தை
ஆள
நினைப்பதில்
என்ன
குறை....?”

